மே 2004










# விளக்கு

# விளக்கு

கல்வியியலாளர்களே!

எழுத்தாளர்களே!

விளக்கு சஞ்சிகை
உங்களின் உயர்வான ஆக்கங்களை
எதிர்பார்க்கின்றது.
எழுதுங்கள்.
எமக்கு அனுப்பி வையுங்கள்.

வாசகர்களே!

உங்கள் கருத்துக்களையும்,
விமர்சனங்களையும் வரவேற்கின்றோம்.
எமக்கு எழுதுங்கள்.

தொடர்புகொள்ளும் முகவரி:
ஆசிரியர்
''**விளக்கு**''
ஆசிரியர் வாண்மை விருத்திக்குழு
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
யாழ் வலயக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.

# உள்ளே உள்ளவை...


## கட்டுரைகள்

- ✦ செவிப்புலன் இழந்தோர் கல்வி மேம்பட.
- ✦ வகுப்பறைக் கற்பித்தலிற் திட்டமிடல்.
- ✦ எண் ஒன்றின் நிறைவர்க்கம் காணும் புதிய வழி.
- ✦ கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் மாற்றமும், தடுமாற்றமும்.
- ✦ ஆரம்பக் கல்வித்துறை வளர்ச்சியில் அதிகாரிகளின் பங்களிப்பு.
- ✦ தமிழரின் கல்வித்தேவையும் இன்றைய நிலையும்.
- ✦ இரைச்சலால் மாசுறும் உலகம்.
- ✦ கற்றலில் கற்பிப்பவரின் பணி.



மே - 2004

வெளியீடு:

ஆசிரிய வாண்மை விருத்திக்குழு

இதழாசிரியர்: செ. மகேஷ்

விலை ரூபா 30/=



## கவிதைகள்

- ✦ மலர்களைப் புரிந்துகொள்.
- ✦ வளர்க அறம் வாழ்க.
- ✦ அறிவைப் பயன்படுத்தல் - அதிசயமே.
- ✦ கரை காணாக்கல்வி.

## தொடர்

- ✦ நிசங்களின் பகிர்வு
- ✦ வாசித்தோம் வாசிப்போம்

## சிறுகதை

- ✦ ஒரு சூரியனும், தாமரைப்பூக்களும்



முகவரி:

**விளக்கு**

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை,

யாழ். வலயக்கல்விப் பணிமனை,

யாழ்ப்பாணம்.




விளக்கு

அகல்: 04 தாரண வருஷம் திருவள்ளுவர்
சுடர்: 08 சித்திரை, வைகாசி ஆண்டு - 2035 மே - 2004

# பதவியும், கடமையும்

பதவியைப்பெற நாம் முன்னிற்கும் வேகமானது அதற்கான கடமையைச் செய்ய முன்னிற்கும் வேகத்தைப் பார்க்கினும் எத்துணை வேகவேறுபாடு கொண்டுள்ளது. என்பதைச் சிந்திப்பது நலமானதென நினைக்கின்றேன். பதவிக்கும் கடமைக்கும் இடையேயான வேக வேறுபாட்டினை பதவியில் அழகு பெறும் நாம் சிந்திக்கவேண்டியது அவசியமாகும். பெற்ற பதவியின் மதிப்பைக் கூட்டுவதும் குறைப் பதுவும் எமது நடவடிக்ளகைகளிலேயே தங்கியுள்ளது என்பதையும் மறந்து விடக்கூடாது. ஒவ்வொரு பதவிக்கும் உரிய உயரிய கடமை ஒழுங்குகள் உள்ளன. அவற்றைத் தொடர்வதுடன் பதவியின் தரத்திற்கு ஏற்ப நமது ஆளுமை விருத்தி யிலும் வேறுபாடு தோன்ற வேண்டியதும் இங்கு வேண்டப்படும் பிரதான நிலைகளாகும். பதவி களைப் பெற நாம் முன்னிற்பதற்கான காரணங்கள் பலவாக இருப் பினும் பதவியின் சிறப்புக்களுக்கு அழகு சேர்க்கும் கடமைகளே வெளிப் படையாக இங்கு பலராலும் எதிர் பார்க்கப்படும் புனித அம்சமாகும். பதவிகளைப்பெற எமக்கு உதவி நிற்கும் கல்வித் தகை மைகளைக் குறித்துச் சற்றுச் சிந்திப்போ மெனில் அவை கற்றல் மூலம் நாம் பெற்ற ஞாபகசக்தியை அளவீடும் பரீட்சை ஊடாகப் பெற்ற சான்றி தழால் உறுதிப்படுத்தப்படுகிறது.

நாம் கற்றவர் என்பதை உறுதி செய்ய அவை நமக்குத் தேவைப்படுகின்றன. அவை பதவியை நாம் பெறுவதற்குத் துணை நின்றனவே தவிர பதவியின் கடமைகளை நிறைவேற்றும் ஆற்றலை உறுதிசெய்யவில்லை. பதவிக்கு வந்த பின்னரோ அன்றேல் பதவியில் இருந்தவர்கள் மூலமோ ஒரு பதவியின் கடமை களைத் தெரிந்து கொள்கிறோம். அப்போதே நாம் எமது பதவியின் சிறப்புக்களைப் பேண முன்னின்று உழைக்க முயல்கின்றோம்.

இன்று பதவியில் இருக்கும் ஒவ்வொருவரும் தமது கடமைகள் பற்றித் தெரிந்து கொள்வதுடன் அவற்றை நிறைவேற்றும் வலிமைமிகு ஆளுமையையும் வளரத்துக்கொள்ள வேண்டும்.

பதவியால் அழகு பெற்றுப் பெருமை பேசுவதால் மட்டும் எவரும் எம்மை உயர்ந்தவன் என்று மதிப்பளித்தல் கூடுவதில்லை. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலமே பதவியின் அழகு பேணப் படுகிறது. அதன்மூலம் பதவிக்கு அழகூட்டி அப் பதவியால் எமது அழகுக்கு மெருகூட்டிக் கொள்கின்றோம். பதவியின் வலிமை யால் பதவிக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்வதும் பதவியின் கடமைகளைப் புறம்தள்ளிச் செயற்படுவதும் பதவியின் சிறப்பைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளாகும். பதவிக்குரிய கடமைகளில் ஆளுமையுடன் ஈடுபடுவதே பதவியின் சிறப்பைப் பேணும் மகத்தான மதிப்புடையதாகும்.

பதவிக்குரிய கல்வித்தகைமை பொதுவாக எதிர்பார்க் கப்பட்டாலும் கல்வித்தகைமைக்கு மேலாக, பதவியின் மதிப்புக்கு ஏற்ற பண்புகளைத் தன்னகத்தே வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வமே மிகவும் வேண்டற் பாலதாகும். தாம் கொண்ட பதவியைப் புகழுக்காகவும், பெருமைக்காகவும் ஒரு சபை நடுவே உயர்ந்தவன் என்ற தோற்றத்துக்காகவும், கருவியாகவும் எண்ணுதல் இன்றைய எம்மவரின் விருப்பாக உள்ளது. அதை நாம் ஏற்றுக்கொண்டாலும் தமது பதவியில் அவர் ஆற்றும் பணிகளின் பால் அவரின் ஈடுபாடும், வேகமும், விவேகமுமே சமூகத்தின் நோக்கில் மதிக்கப் படுபவையாகும்.

ஒருவரது கல்வித் தகைமையைச் சொல்லி அவனது பாட சாலைக் கல்வி அறிவு வளத்திற்கு வலிமை சேர்க்க நாம் முயல்வதும் அவனது தவறுகளுக்கு நியாயம் கற்பிக்க முயல்வதும் பதவியை அவன் தக்க வைத்துக்கொள்ள எடுக்கும் சில உபாயங்களாகும். இன்றைய கல்வித் தேர்ச்சிகளைக் கணிப்பீடு செய்யும் தொடர் கணிப்பீட்டு முறையில் நாம் ஒருவரது பதவிச் செயற்பாடுகளைப் பரீட்சிப்போ மெனின் பதவிக்குப் பொருந்தாத அல்லது பதவியை அவமதிக்கும் எந்தச் செயலையும் அவர் செய்யும்போது தண்டிக்கவும்.

பதவியை மேம்படுத்தும் உயரிய கடமைகளைச் செய்யும் போதும் சமூகத்திற்குப் பயன்தரு பணிகளில் ஈடுபடும்போதும் அவற்றைப் பாராட்டிச் சன்மானம் வழங்கவும் நாம் முயலுதல் வேண்டும்.

பதவிகளைப் பெறும் தகைமைகளைப் பெறுவோம். கடமை களைத் தேர்ந்து பதவிகளைப் பெருமைப்படுத்துவோம்.



# கரை காணாக் கல்வி

எல்லாவற்றையும் படித்துவிட்டேன் என்பதில்
எந்த அர்த்தமும் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை.
எல்லாவற்றையும் படித்துக்கொண்டிருக்கிறேன். என்பதில்
படர்ந்திருக்கும் அர்த்தங்களோ பலகோடி
படிபடி
படித்துக்கொண்டே இரு
புதிது புதிதாய்
படி
கல்விக்குக் கரையேது!

- உமாபாரதி

# செவிப்புலன் இழந்தோர் கல்வி மேம்பட....

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து என்று வள்ளுவன் கூறியதிலிருந்துண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்பே கல்வியின் பயன் உணரப்பட்டுள்ளது. 1948ம் ஆண்டின் அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தின் கூறு - 26 "பிள்ளைகள் ஒவ்வொருவரும் கல்வியைப் பெறும் உரிமையுடையவர்கள்'' என்பதை வலியுறுத்துகிறது.

பிறப்பில் அல்லது பிறப்பின்பின் பல்வேறு காரணங்களால் ஊனம் அல்லது வலுவிழப்பு ஏற்படலாம். இத்தகைய குறை பாடுடைய பிள்ளைகளும், கல்வியைப் பெறுவதற்கு உரிமையுடையவர்களாவர். சாதாரண பிள்ளைகளைப் போலன்றிக் குறைபாடுடைய, வலுவிழந்த, ஊனமுற்ற பிள்ளைகள். அவர்களது கல்வியைக் கற்ப தற்கு அதிக அளவிலான உதவிகள் தேவைப்படுகின்றன. இவ்வாறு அதிக அள விலான உதவிகளை எதிர்நோக்கும் பிள்ளைகள் விசேட கல்வித் தேவையு டைய மாணவர்களாக ஏற்றுக் கொள்ளப் படுகின்றனர். விசேட கல்வியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களினால் கற்பித்தலுக் கான விசேடகல்வித் துணைச் சாதனங் களின் உதவியுடன் இவர்களுக்குரிய கல்வி முன்னெடுக்கப்படுகிறது.

நமது நாட்டில் செவிப்புலன் விழிப்புலன் குறைந்தோருக்கான முதலா வது பாடசாலை இங்கிலாந்துச் திருச் சபையின் **(Church of England)** "செனனா'' சங்கமிசனறியைச் சேர்ந்த செல்வி மேரி. எப். சாப்மன். என்பவரால் 1912ம் ஆண்டு இரத்மலானையில் ஆரம்பிக் கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1935ம் ஆண்டளவில் கத்தோலிக்க மதத்தவரால் இராகமம் என்ற இடத்தில் இரண்டாவது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னர் 1956ம் ஆண்டில் யாழ் மாவட்டத் தில் கைதடி என்னும் கிராமத்தில் தமிழ் மக்களுக்காக தமிழ் மொழி மூலமான முதலாவது பாடசாலையை "அங்கிலிக்கன்" திருச்சபையினர் ஆரம்பித்தனர். கேள்வி, பார்வைக்குறைபாடுடையோரின் கல்விப் பணிக்காக தற்பொழுது 30 பாடசாலைகள் வரை இயங்கி வருகின்றன. இவற்றில் 24 பாடசாலைகள் கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்டு அரச உதவி நன்கொடை பெறும் தனியார் பாடசாலைகளாக இயங்கு கின்றன.

புலனிழந்தவர்களுக்கான கல்வி ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டுகளை எதிர் நோக்கி இருக்கும் இக்காலத்தில் பார் வைத்திறன் குறைந்தோர் தமது கல்வியிற் பெற்றுள்ள வளர்ச்சிக்கு நிகராக செவிப் புலன் குறைந்தோர் தமது கல்வியில் குறிப் பிடத்தக்க வளர்ச்சியினை எட்டவில்லை என்ற உண்மையை உணரும்போது நாம் வேதனைப்படாமல் இருக்கமுடியாது.

"செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை" என்ற வள்ளுவர் வாக்கு ஒருவன் தனது கல்வி அறிவைச் சிறப்பாக பெறுவதற்கு செவிப்புலன் உணர்வு முதன் மையானது என்ற உண்மையை வெளிப் படுத்தி நிற்கின்றது.

கேள்வித் திறன் உள்ள ஒரு குழந்தை நான்காயிரம் மணித்தியாலங்கள் வரை ஒலிகளைக் கேட்டபின் அது பேசுவதற்கு ஆரம்பிக்கிறது. ஆனால் ஒலிகளைக் கேட்க முடியாத கேள்வித்திறனை இழந்த ஒரு குழந்தை பேசும் திறனை இழந்ததாகக் காணப்படுகிறது. செவிப்புல உணர்வு கேள்வித் திறன் குறைவால் பேசும் இயல்பை இழந்த குழந்தை தனது கண்களால் உற்று நோக்கிச் செயல்களை உணர்ந்து கொள்ளுகிறது. தனது எண்ணங்களை வெளிப்படுத்தவும் தேவைகளைப் பெற்றுக்கொள்ளவும் தொடர்பாடல்களுக்காகவும், உடலசைவுகளையும், சைகைகளையும் ஊடாகமாகக் கொள்கிறது.

குழந்தை பிறந்த 3-12 மாத வரையான காலப் பகுதியில் குழந்தையின் செவிப்புலக் குறைபாட்டையும், கேள்வித் திறன் இழப்பையும் அதன் பெற்றோர் எளிதாக இனம் காண முடியும். குழந்தையிடம் கேள்விக் குறைபாடு காணப்படின் காது மூக்கு தொண்டை **(E.N.T.)** மருத்துவ நிபுணருடன் தொடர்பு கொண்டு மருத்துவச் சிகிச்சையின்மூலம் குணப்படுத்த முடியாத கேள்விக் குறைபாடு காணப்படின் அக்குழந்தையை இரண்டரை, மூன்று வயதிலிருந்தே பேசுவதற்கான பயிற்சியைப் பெறுவதற்காக பெற்றோர் அனுபவமுள்ள ஆசிரியரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். அங்கே கேள்வித்திறன் குறைந்தோருக்கான கல்விப் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்களினால் குழந்தைக்குப் பயிற்சியும், கல்வியும், அளிக்கப்பட வேண்டும்.

கேள்வித்திறன் குறைவானவர்களின் ஒலி உணர்வை **Audio Meter** என்ற கேள்வி மானி - கருவியினால் அளக்கமுடியும். இவர்களிடம் காணப்படும் குறைந்த அளவிலான ஒலி உணர்வை, கேள்வியை கேள் துணைக் கருவி **(Hearing aid)** களின் உதவியுடன் கேட்டல் பயிற்சிகளை அளிப்பதன்மூலம் பேசும் திறனை உருவாக்க முடியும். கேள்விக் குறைபாடுடையோர் தாம் வாழும் குடும்பத்தில், சூழலில் உள்ளவர்களின் பேச்சை அறிந்துகொள்ளவேண்டிய தேவைகள் உள்ளன. இதனால் பிறரது பேச்சை உணந்து கொள்ளும் உதட்டு வாசிப்பு **(Lip Reading)** பேச்சு வாசிப்பு **(Speech Reading)** ஆகிய பயிற்சிகளைப் பெற வேண்டும். அத்துடன் குழந்தை தனது எண்ணங்களைத் தெரியப்படுத்த பேசும் பயிற்சி **(Speech Training)** யையும் குழந்தைப் பருவத்திலிருந்தே பெறுவது அதிக நன்மை பயப்பதாக அமையும்.

செவித்திறன் குறைந்தோருக்கான கற்பித்தல் முறைகளுள் வாய்மொழி முறையான **(Oral Methored)** பேச்சு முறைக் கற்பித்தலே அதிக பயன் அளிக்கக்கூடியதாகும். வாய்மொழி பேச்சுமுறை, கல்வியால் கேள்வித்திறன் குறைந்த ஒரு பிள்ளை பின்வரும் அனுகூலங்களைப் பெறக்கூடியதாக இருக்கும்.

1. உதட்டு வாசிப்பு **(Lip Reading)** ஊடாக பிறர்பேசுவதை அறிந்து கொள்ளுகின்றது.
2. கேள்வித் திறன் குறைந்த பிள்ளை பேசுவதற்குக் கற்றுக்கொள்கிறது.
3. உதட்டு வாசிப்புத்திறன் பேச்சின் ஒலித் தொடர்புகளுக்கான உதட்டு அசைவுகளை வரிவடிவங்களாக எழுதுவதற்கு முடிகிறது.
4. வரிவடிவமாகிய எழுத்துக் களையும், சொற்களையும், வாய்க்கியங்களையும் வாசிக்கக் கற்றுக் கொள்கிறது.
5. ஒலியை வெளிப்படுத்தி வாசிப்பதனால் பேச்சில் திருத்தம் ஏற்படுகிறது.
6. வாசிப்பதன்மூலம் எழுத்து, சொற்றொடர், மொழி அமைப்பு

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலனிழந்தோர் பாடசாலையில் நாற்பது வருடங்களுக்கு மேலாக ஆசிரியராகவும், உதவிஅதிபராகவும், சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்றவரான ப. சந்திரசேகரம் அவர்கள் செவிப்புலனிழந்தோர் விழிப்புலனிழந்தோர் கல்வி தொடர்பான பல ஆக்கங்களை ஈழத்தின் பத்திரிகைகள் பலவற்றில் வெளியிட்டுள்ளார். சிந்தனைத்திறனும், செயல் விவேகமும் கொண்ட விசேட கல்வி ஆசிரியரான இவரது சேவையால் விசேடக் கல்விப்புலம் சிறப்பான பயனைப் பெற்றுள்ளது.

செவிப்புலனிழந்தோர் கல்வி நோக்கில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்வதோடு கல்விக் கொள்கைகளில் உறுதியான மாற்றங்களையும் ஏற்படுத்த வேண்டும். என்ற கொள்கை நிரம்பிய அவரது நோக்கு நிறைவேற கல்வியியலாளர்கள் இத்துறையில் ஈடுபட்டு உழைக்க முன்வர வேண்டுமென எதிர்பார்க்கிறார். செவிப்புலன் இழந்தோர் கல்வியை மேம்படுத்தும் நோக்குடையோரின் கருத்தை விரும்பி அவரது கட்டுரை விளக்கில் பிரசுரிக்கப்படுகிறது.



## ப. சந்திரசேகரம்

என்பவைகளை அறிந்து கொள்வதுடன் பொருளையும், உணர்ந்து கொள்கிறது.

7. பல்வேறு பட்ட விடயங்களை வாசித்துப் பொருள் உணர்ந்து கொள்வதனால் சிந்தனைத்திறன் வளர்கிறது.
8. மொழியின் வடிவமைப்பை அறிந்து கொள்வதனால் தனது எண்ணக் கருக்களையும், சிந்தனைகளையும் மொழிஅமைவு விதிமுறைகளுக்கு ஏற்ப எழுதுவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

செவித்திறன், விழித்திறன் குறைந்தோர் கல்விப்போதனைக்கென 1970 களில் மகாரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விசேட கல்விப் பயிற்சிநெறி, - சிங்கள மொழி மூலம் ஆரம்பிக்கப்பட்டதால் - சிங்கள மொழி மூலம் கல்விகற்கும் மாணவர்கள் பயன் அடையக் கூடியதாக உள்ளது. கல்வி அமைச்சில் விசேட கல்விப்பிரிவு அமைக்கப்பட்டமையானது, அரசு இக்கல்வியில் அக்கறை கொண்டுள்ளமையை உணர்த்துகின்றது. எனினும் அமைச்சின் விசேட கல்விப்பிரிவானது தனது செயற்பாடுகளில் விசேட கல்விப் பாடசாலைகளின் முகாமையாளர்களின், ஆசிரியர் நியமனத்தை அங்கீகரிப்பதும், சம்பளங்களை வழங்குவதுமே நோக்கமாகச் செயலாற்றுகின்றது. செவித்திறன் குறைந்த மாணவர்களின் எதிர்கால நலன் நோக்கி கல்வியில் தனது சேவையைப் போதியதாக விரிவுபடுத்த அது தவறி விட்டது. மகாரகமவில் இயங்கும் தேசிய கல்வி நிறுவனத்தின் விசேட கல்விப் பிரிவு குறிப்பாகக் கேள்வித்திறன் குறைந்த பிள்ளைகளின் கல்வி தொடர்பாக, முறையான பாடத்திட்டத்தை உருவாக்கி ஒருமுகப்படுத்தப்பட்ட கற்பித்தலினை மேற்கொள்ள ஒருங்கமைக்கப்பட்ட முறைகளையும், திட்டங்களையும் உருவாக்கிச் செயற்படுத்தாமை, செவித்திறன் குறைந்தோரது கல்வி மேம்பாடடையாமைக்கான காரணிகளாக காணப்படுகின்றன.

யாழ் தேசியக்கல்வியியற் கல்லூரியில் விஷேட கல்விப்பாடநெறி 2004ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருப்பதில் நாம் பெருமை அடைகிறோம். எனினும் செவிப் புலன் குறைந்தோருக்கான கற்பித்தற் பயிற்சியை முகிழ்நிலை மாணவர்கள் சிறப்பாகப் பெறவேண்டுமெனில் இத்துறையில் ஆற்றலும், அனுபவமும் உள்ள பயிற்றுவிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

செவித்திறன் குறைந்தோர் அஃதாவது கேள்விக்குறைபாடுடையோர் கற்றல் கற்பித்தலுக்குத் தேவையான நவீன மின்னியற் சாதனங்கள் அனைத்தையும் விஷேட கல்விப்பிரிவானது கொண்டிருத்தல் வேண்டும். விசேட கல்விப் பயிற்சி ஆசிரிய மாணவர்கள் தமது பயிற்சி செயன்முறைக்காக கைதடி நவீல்ட் பாடசாலையையே ஏற்றுக்கொண்டிருப்பினும் 2000ஆம் ஆண்டில் ஏற்பட்ட தென்மராட்சி இடம்பெயர்வின்போது இப்பாடசாலைக்குரிய கற்றல் கற்பித்தலுக்கான நவீன மின்னியற் சாதனங்கள் அனைத்தும் இழக்கப்பட்டு அல்லது அழிக்கப்பட்டுப் போன நிலையில் இருப்பதனால் இத்துறையில் பயிற்சி பெறும் மாணவர்கள் நிறைவான பயிற்சியைப் பெறுவதற்கு எங்ஙனம் வளங்களைப் பெறப்போகிறார்கள் என்ற ஐயப்பாடு அதிகமாகவே உள்ளது.

நமது நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக பெரும் அளவிலான நிதி ஒதுக்கப்பட்டாலும், விசேட கல்விக்குரிய புலனிழந்த மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளிற்காக அதிக அளவில் அக்கறை காட்டப்படாமை கவலைக்குரிய விடயமாகும். புலனிழந்தவர்களும், வலுவிழந்தவர்களும், இந்நாட்டின் குழந்தைகளே, என்பதை உணரும் அதே வேளையில் புலனிழந்தோரது கல்வித் தேவைகள் அரசினால் கவனத்திற் கொள்ளப்படவேண்டியவையாகும். எதிர்காலத்தில் அவர்கள் கல்வியில் வளம் பெறவேண்டுமானால் கல்வி அமைச்சினதும் தேசிய கல்வி நிறுவனத்தினதும் விசேட கல்விப் பிரிவுகள் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான பண்பாட்டு மையம் **(UNESCO)** ஐக்கியநாடுகள் சபையின் அகில உலக சிறுவர் அமைப்பு நிதியம் **(UNICEF)** விசேட பாடசாலை களின் மேலாளர்கள், விசேட பாடசாலைகளின் ஆசிரியர்கள், கல்விச் சிந்தனையாளர்கள், மொழி வல்லுநர்கள் காது மூக்கு தொண்டை**(E.N.T.)** மருத்துவர்கள், பெற்றோர்கள், ஆகிய அனைவரினதும் பங்களிப்புக்கள் கூட்டு முயற்சிகளாக ஒன்றிணைக்கப்படவேண்டும். இதற்காக பின்வரும் நிலைகளில் இதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கு கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1. அரசு தனது வரவுசெலவுத்திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கும் நிதியில் செவித்திறன் குறைந்தோர் கல்விமேம்பாட்டுக்கென அதிகஅளவில் இணை நிதியை ஒதுக்கவேண்டும்.

2. மாவட்டங்களிலுள்ள உயர்நிலை வைத்தியசாலைகளில் செவிப்புலக் குறைவை துல்லியமாக அளவீடு செய்வதற்கும் சிறந்த மருத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்குமென உரிய மையங்கள் உருவாக்கப்படவேண்டும்.

3. பாடசாலைகளில் விசேட கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான துறை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்.

4. கேள்விக் குறைபாடுடைய பிள்ளைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் சிறப்பாக அமையவும் அவர்களின் சமூகத் தொடர்புகள், அவர்களின் எதிர்காலம் என்பன நன்முறையில் மிளிரவும் செவிப்புலன் இழந்தோரின் பெற்றோர், பாதுகாவலர், குடும்ப



உறுப்பினர்கள் யாவருக்கும் உரிய வழி காட்டற் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

5. இரண்டரை வயது தொடக்கம் ஐந்து வயது வரையுள்ள காலப்பகுதியில் கேள்வித்திறன் குறைந்த பிள்ளையை இனம்காண்பதற்கு உற்றுநோக்குதல், கேட்டல், பேச்சு, உதட்டுவாசிப்பு, பேச்சு வாசிப்பு ஆகிய துறைகளில் பயிற்சி அளிப்பதற்கான பள்ளி முன்கல்வி மையங்கள் **(Nursery Education Center)** நிறுவப்படவேண்டும்.

6. விசேட பாடசாலைகளில் கல்வி கற்கும் 30**dB** (30 டெசிபெல்) தொடக்கம் 60**dB** (60 டெசிபெல்) வரையான கேள்வி உரப்பு அளவுகளில் கேள்திறன் உள்ள சிறுவர்கள் இனங்காணப்பட்டு கேள்வி, பேச்சு, வாசிப்பு ஆகியவற்றில் பயிற்சிகள் அளிக்கப்பட்டபின் அவர்களைப் பொதுப்பாடசாலைகளில் சாதாரண மாணவர்களுடன் இணைத்து ஒன்றிணைந்த கல்வியைப்பெறவேண்டும் என்பதை உறுதி செய்யும் சட்டவாக்கம் கல்வியமைச்சினால் உருவாக்கப்படவேண்டும்.

7. பொதுக்கல்வியைத் தொடர்வதில் இடர்பாடுகளுள்ள தொடரமுடியாத நிலையிலுள்ள கேள்வி, பேச்சுக் குறைபாடுடைய சிறுவர்களின் கல்விக்காக விசேட பாடத்திட்டம் உருவாக்கப்படுவதுடன் இலகு மொழி மூலமாகவும் இலகுபடுத்தப்பட்ட பாடநூல்கள் ஆக்கப்படுவதுடன் கற்பித்தலுக்கான வழிகாட்டிகளும் உருவாக்கப்பட வேண்டும்.

8. பொதுப்பாடத்திட்டங்களுக்கும், விசேடபாடத்திட்டங்களுக்கும் அமைவாகக் கல்வியைத் தொடர்ந்த விசேட கல்வித்தேவையுடைய வலுவிழந்த மாணவர்களுக்கு கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்/உயர்தரம்) பரீட்சைகளில் தோற்றுவதற்கு விசேட பாடங்களுடன் ஏனைய பாடங்களிலும்

இலகுபடுத்தப்பட்ட பரீட்சைகள் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும். உரிய சான்றிதழ்களைப் பெற்றவர்கள் பல்கலைக்கழகக் கல்வியை/தொழில் நுட்பக் கல்வியைப் பெற விசேட அனுமதியில்/முன்னுரிமையில் வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

**9.** அரச பொதுப் பரீட்சையில், உரிய விசேட கல்விச் சான்றிதழ்களைப் பெற்ற ஊனமுற்றோர் - வலுவிழந்தோர் உரிய தொழில் வாய்ப்புக்களை, அரச தனியார் துறைகளில் பெற்றுக்கொள்ள முன்னுரிமையில் வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

**10.** செவிப் புலனிழந்தோருக்கான விசேட பாடசாலைகளில் விடுதி முறைகளைக் கூடிய அளவு தவிர்த்து - இவர்கள் தம் வீடுகளிலிருந்து பாடசாலைகளுக்கு வந்து செல்வதற்கு வாய்ப்பளிப்பதனால், இவர்களுடைய பேச்சுமொழி வளம் பெறவும், சமூக ஒன்றிணைப்பு ஏற்படவும் வாய்ப்பாகிறது. இதற்காக இலங்கைப் போக்கு வரத்துச் சபை புலனிழந்தோருக்கு இலவசப் பயணவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

**11.** விசேட பாடசாலைக்குத் தேவையான கேள்வி, அளவீட்டுக் கருவிகள், கேள்வி பேச்சுப் பயிற்சி அளிப்பதற்கான நவீன கருவிகள் ஆகியவற்றை கல்வி அமைச்சு பிரித்தானியா, யப்பான் போன்ற நாடுகளிலிருந்து பெற்று, நாட்டிலுள்ள விசேட பாடசாலைகளுக்கு வழங்க வேண்டும்.

**12.** மொழியியல் பேரறிஞர்கள், துறை சார்ந்த பாட அறிஞர்கள், விசேட கல்வியில் ஆற்றல், அனுபவம் உள்ளவர்களையும் உள்ளடக்கியதாக, "செவித் திறன் குறைந்தோர் கல்வி ஆய்வு மையம்." **(Research Center for The Deaf Education.)** கல்வி அமைச்சின் அனுசரணையுடன் உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும்.

எமக்குக் கேள்வித்திறன் உள்ளது, எமது மொழி இனிமையானது, எமது மொழியின் இசையின் இனிமையை, எம் கேள்வித்திறனால் உணர்ந்து இன்புறுகின்றோம். வாத்தியங்களின் இனிய நாதங்களைக் கேட்டு உளம் மகிழ்கின்றோம். கேள்வித்திறனால் கற்றலில் மேம்பட்டு அறிவைப் பெருக்கியுள்ளோம். கற்றலின் ஒவ்வோர் எல்லையிலும் அதன் உரிமங்களாகப் பல பட்டத்தாள்களையும் பெறுகின்றோம். சமூகத்தில் முதன் நிலையில் திகழ முனைகின்றோம். எம் அனுபவம், ஆற்றல், திறன், பட்டச்சான்றிதழ்கள், இவைகள் எல்லாம் மனித குலத்தில் கேள்வித் திறன் இழந்து மொழியின் இனிமை, அழகு, இசையின் இனிமை, இசைக் கருவிகளின் இனிய நாதம், ஒலியின் வேறுபாடுகள் என்பவைகளை அறியாது அழகிய உலகில் மௌனத்தை உணரும் உயிர்களாக எம் மத்தியில் வாழும் செவித்திறன் குறைபாடுடைய குழந்தைகளைப் பற்றி நாம் சிந்தித்ததுண்டா? எனவே அவர்கள் தம் கல்வியில் வளமடைவதற்கு உள்ள தடைகளை உடைத்து, அவர்கள் தம் கல்வியில் வளர்ச்சியும், பயனும், அடைய, எமது திறன்களையும், ஆற்றல்களையும் பயனாக்க முன்வருவோமாக.

"இதற்காகக் கல்வி அமைச்சு தனது ஆக்கப்பாடுகளை விரைவாக முன்னெடுக்கவேண்டும்.'

"கல்லாத பேரைக் காணுங்கால்,
கல்வி நல்காக்
கசடர்க்குத் தூக்குமரம்
உண்டாம்."



# நிசங்களின் பதிர்வு...

## ஓய்வு பெறும் சரவணபவான்

*தந்தையுமாய்....*

இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர்..... "விஜயரட்ணம் பாடசாலைக்கு உடன்வரவும்" தபாலில் தந்திச் செய்தி ஒன்று வந்திருந்தது. அதிபர், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் எனத் தந்தியில் பொறிக்கப்பட்டிருந்தது. தந்திகளைப் பிரித்துப் படித்த அக்கா, "தம்பி பள்ளிக் கூடத்துக்கு ஒரு கிழமையாய் நீ போகேல்ல. அதுதான் தந்தியடிச்சிருக்கினம். உன்னில எவ்வளவு பற்று வச்சிருக்கினமெண்டு இந்தத் தந்தியில தெரியுது. எங்கட வறுமை அவையளுக்குத் தெரியாது தானே. நான் அடுப்புப் புகட்டில ஒரு உண்டியல் தாட்டு வச்சிருக்கிறன். உடச்சுப் பார்ப்பம்." அக்கா சொல்லிய கையோடு உண்டியலைக் கிண்டி எடுத்துக் கொண்டு வந்தாள். உண்டியல் உடைக்கப்பட்டபோது சில்லறைகள் சிதறின. கூட்டிக் கணக்குப் பார்த்தபோது தொண்ணூற்று மூன்று ரூபாய்களிருந்தன. "தம்பி இதைக் கொண்டு போ. பரீட்சைக்கு ரெண்டு மாதந்தானே கிடக்குது. ஒருமாதிரி படிச்சு முடிக்கப்பார்." அக்கா என் படிப்புமீது வச்சிருந்த அதிக அக்கறையும், தான் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பு படிக்க முடியாவிட்டாலும் என்னைப் படிக்க வைத்துப் பார்க்கவேண்டுமெனக் கொண்டிருந்த உறுதியும், எனது எதிர்காலப்பாதைக்கு வழிகாட்டியது. கூப்பன் கடையில் எடுத்து இரண்டு ஆண்டுகளாய் கட்டிய எட்டுமுழ பொளியஸ்ரர் வேட்டியை தோய்த்துக் கட்டிக்கொண்டேன். புதுக்குடியிருப்புச் சந்தியிலுள்ள ஒரேயொரு சாப்பாட்டுக்கடை நவரட்ணம்கடை. கடகடத்துக் கொண்டு வந்த மாத்தளன் பஸ்சிலிருந்து இறங்கி நேராக நவரட்ணம் கடைக்குச் சென்றேன். அந்தத் தொண்ணூற்று மூன்று ரூபாக்களும், நவரட்ணம் கடைக் கணக்குக் கொப்பியில் இருப்பாகிக் கொண்டன. கையிலிருந்தால் வீண் செலவாகிவிடுமென்ற அச்சம். பாடசாலைக்குள் நுழையும்போது சற்று நடுக்கம் கலந்த பயம் உருவாகியிருந்தது. அதிபர் அலுவலக வாசலில் சென்று நின்றேன். உள்ளே ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. உள்ளே அதிபர் ஏ.கே. மகாலிங்கத்தினருகே உதவி அதிபர் சரவணபவன் இருந்தார். அவர்தான் எமது வகுப்பாசிரியர் தமிழ், வரலாறு ஆகிய இருபாடங்களையும் எடுப்பவர். வகுப்பில் கெட்டிக்கார மாணவனாக இருந்ததால் அவர் என்மீது பற்றும், பாசமும் வைத்திருந்தார். நல்ல பெறுபேறு எடுப்பேனென்ற நம்பிக்கையும் அவருக்கிருந்தது.

**மணலாறு விஜயன்**

அகில உலக ஆசிரியர் நாளையொட்டி சுவாமி விபுலானந்தர் அவர்களின் நினைவாக

விளக்கு சஞ்சிகை நடாத்தும்

## எழுத்தாக்கப் போட்டிகள் 2004.

- கட்டுரை எழுதுதல்.
- சிறுகதை ஆக்கம்.
- கவிதை ஆக்கம்.
- விமர்சனம் எழுதுதல்.

ஆகிய எழுத்தாக்கப் போட்டிகளில்
சகல ஆசிரியர்களையும் பங்குகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.
தெரிவாகும் எழுத்தாக்கங்களுக்கு பணப் பரிசுகளும், சான்றிதழ்களும், வழங்கப்படவுள்ளன.
விபரங்களையறியப் பக்கங்களைப் புரட்டுங்கள்.

வாசலில் நீண்டநேரம் நின்ற என்னை திரும்பியதும் சரவணபவன் சேர் கண்டுகொண்டார். "விஜயரட்ணம் ஏன் ஒரு கிழமையாய் பள்ளிக்கூடம் வரேல்ல. தந்தி கிடச்சதோ" கணீரென்று வந்த அவரது சிம்மக்குரல் என்னை நடுங்க வைத்தது. பொலியஸ்ரர் வேட்டி அவிழ்வது போன்ற உணர்வு, வீட்டு வறுமையை எப்படிச் சொல்லமுடியும். அம்மாவின் பழஞ்சாறியை மூன்றாக கிழித்து ஒரு துண்டைச் சறமாகக் கட்டுவதை சொல்லமுடியுமா?.... ஒரு நாளைக்கு ஒரு தடவை கோதுமைப் புட்டவித்து பங்கீட்டில் சாப்பிடுவதை சொல்ல முடியுமா?.....அது கூட இல்லாமல் இருந்த நாட்களைச் சொல்லமுடியுமா நவரட்ணம் கடையில் அறுபது சதத்துக்கு ஒரு டம்ளர் பசுப்பாலை காலை யுணவாகவும், ஐந்து இடியப்பமும் சொதியும் ஒரு ரூபா நாற்பது சதத்துக்கு மதிய உணவாகவும், உண்டுவிட்டு இரவு பட்டினி யாகக் கிடப்பதை சொல்ல முடியுமா?...... அதுவும் முடியாமல் படிப்புக்கு முழுக்குப் போடுவோமெனக் கருதி நின்ற கதையைச் சொல்லமுடியுமா?.. கட்டுப்படுத்த முடியாமல் கண்ணீர் பெருகியது. அழுவதைத் தவிர வேறுபதிலை எனக்கு சொல்ல முடியா மற்போயிற்று சரவணபவன் சேரின் பார்வை சில கணம் என்மீது நிலைத்து நின்று பின்னர் அதிபர் பக்கம் திரும்பியது. "விசய னுக்கு வீட்டில கஸ்ரம் போல கிடக்குது. ரெண்டு மாதந்தான் பரீட்சைக்கு கிடக்குது. நாங்கள் செலவைக் கொடுத்து படிக்க வரச் சொல்லுவம்" என அதிபருடைய காதில் மெதுவாகச் சொல்வது எனக்கும் கேட்கத்தவறவில்லை. மீண்டும் எனது பக்கம் திரும்புகின்றார். "விஜயரட்ணம் வீட்டுக்கஸ்ரத்தை யோசிக்கவேண்டாம். ரெண்டு மாதந்தான். வீட்ட சாப்பிடலாம். பள்ளிக்கூடச் செலவுகளையும் நான் பாக்கிறன். தொடர்ந்து பள்ளிக்கூடத்திற்கு வா..... "தந்தையோடு கல்விபோகும்" என்பது ஆன்றோர் கண்டுணர்ந்து சொன்ன பொன்வாக்கு. என் வாழ்வின் அனுபவ மாகவும் மாறியிருந்தது. தந்தையை இழந்து மூன்று ஆண்டுகள். ஆனால்...... எனது தந்தை மீண்டும் உயிர்த்து வந்து நின்றதுபோல உணர்வு... அடக்க முடியா மற் பொங்கி வந்த அழுகைக்குத் தடை போடவில்லை. என் தந்தையின் வடிவாய்ச் சரவணபவன் தெரிந்தார்... ஒரு நல்லாசிரியர் தந்தையுமாகி நின்ற நாட்கள்...... என் பசுமையான நினைவுகளில் கோலமிட்டன.

அடுத்த இதழிற் தொடரும்

# வகுப்பறைக் கற்பித்தலிற் திட்டமிடல்

**பொ**துக் கலைத் திட்டத்தின்கீழ் ஒரு மாணவன் தனது விசேட திறன்களை இலகுவாக அடையாளம் கண்டு தனது சுய நம்பிக்கையுடன், தான் பயன்மிக்க ஒரு மனிதப் பிறவி என்பதையும் விருத்தி செய்துகொள்ள வகுப்பறைகளில் உகப்பானதொரு சூழ்நிலை உருவாக்கப்படுதல் வேண்டும்.

மாணவர்கள் இலகுவாகக் கிரகித்துக்கொள்ளக்கூடிய விதத்தில் கற்பிக்கவிருக்கும் பாட உள்ளடக்கத்தை அமைப்பாக்கி, ஒழுங்குபடுத்தி, இலகுவாக்கி வழங்குவதன் ஊடாகக் கற்பித்தற் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் ஒழுங்கமைக்க முடியும். கற்பித்தற் செயற்பாடுகள் சிறப்பாக ஒழுங்கமைக்கப்படின் வகுப்பறைகளில் உகப்பானதொரு சூழ்நிலை உருவாகும்.

கற்பித்தற் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் ஒழுங்கமைப்பதில், நடைமுறைப்படுத்தவிருக்கும் கற்றல் நடவடிக்கைகள் பற்றிய தெளிவினைப் பெறுவதில் திட்டமிடல் என்ற அம்சம் முக்கிய இடம் பெறுகின்றது.

"நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஒருமுகப்படுத்தி ஊக்கத்தின் அடிப்படையில் நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கான நோக்கங்களையும், வழிமுறைகளையும் அமைத்துக் கொள்ளல் திட்டமிடல் எனலாம்."

இவ்வரைவிலக்கணத்தை நாம் விரிவுபடுத்தினால் திட்டமிடல் என்பது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக அமையும்.

அவையாவன:

இலக்குகளையும், எதிர்ப்பார்ப்புக்களையும் நிச்சயித்துக்கொள்ளல்.

நோக்கங்களை ஆக்கிக்கொள்ளல்.

இலக்குகளை அடைவதில் சூழலிலுள்ள உதவிகளையும், தடைகளையும் இனம்காணல்.

ஏற்கனவே உள்ள நடைமுறைகளுடன் இலக்குகளையும் எதிர்பார்ப்புக்களையும் அடைவதற்கு வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.

ஒழுங்குகளையும். வழிமுறைகளையும் வகுத்துக்கொள்ளல் என அமையும்.

ஆகவே திட்டமிடல் என்பது முன்னேற்றத்தை வென்றெடுக்கும் ஒரு கருவியாகும். நேர்நிலையான ஒழுங்கமைந்த மாற்றங்களை வருவிப்பதற்கான ஓர் உபாயமாகும்.

இக்கோட்பாடு வகுப்பறைக் கற்பித்தலுக்கு முற்றிலும் பொருத்தமான ஒரு கோட்பாடாகும்.

மாணவன் தன் திறன்களையும், மனப்பான்மைகளையும், அறிவையும், விழுமியங்களையும், வளர்க்குமாறு அவனுக்கு உதவும் பணியான கற்றல் - கற்பித்தல் என்ற செயல் அம்சத்தை ஒழுங்காகத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதன் மூலமே ஓர் ஆசிரியரால் தனது வகுப்பறைக் கற்பித்தலின் ஊடாகத் தனது மாணவரிடத்தில் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

கதிரேசன் சுவர்ணராஜா
விரிவுரையாளர்,
கல்வியியற் கல்லூரி, வவுனியா

வகுப்பறை ஒன்றுக்குள் நுழையும் ஆசிரியர் ஒருவர் எவ்வளவுதான் அனுபவம் கொண்டவராக இருந்தாலும் அவர் கற்பிக் கப்போகும் பாடவிடயத்தில், சிறப்புத் தேர்ச் சியும், நிபுணத்துவமும் கொண்டவராக இருந்தாலும் அவரது வகுப்பறைச் செயற் பாடுகள் தொடர்பாகத் திட்டம் எதுவுமின்றி வகுப்பறைக்குள் பிரவேசித்தல் முழுமை யான அடைவினை ஏற்படுத்தமாட்டாது.

பல வருடங்களாகக் கற்பித்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் தங்களது வகுப்பறைச் செயற்பாடுகளுக்குத் திட்ட மிடல் அவசியமில்லை. இதற்கென பிரத்தியேகமான ஆயத்தங்களோ, தயாரிப் புக்களோ அவசியமில்லை என்ற வாதத்தை முன்வைக்கலாம். ஆனால் ஆசிரியர்கள் ஒவ்வொரு ஆண்டும் வெவ் வேறு மாணவர்களுக்கே கற்பிக்கின்றனர். என்பதையும் ஆண்டுக்கு ஆண்டு ஒரு குறிப்பிட்ட வகுப்பில் கற்கும் மாணவர் புதிய வேறுபட்ட முகங்கள் என்பதையும் கருத்திற்கொள்ளல் வேண்டும்.

வகுப்பறை ஒன்றில் மாணவர் களின் இயல்புகளும் அவர்கள் மத்தியில் எழக்கூடிய பிரச்சினைகளும், அவர்கள் எதிர்நோக்கும் இடர்களும், கற்பதில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வங்களும் வேறுபட்டவையாகவே உள்ளன. அதற்கு ஏற்ப ஆசிரியர்கள் தங்களது வகுப்பறைச் செயற்பாடுகளைத் திட்டமிடலே மாணவரை முன்னேற்றத்திற்கு இட்டுச்செல்ல வழிவ குக்கும். அத்துடன் மாணவர்களின் அபிலா சைகளுக்கு மதிப்பளிக்கும் மாணவர் மையக் கல்வியையும் நிறைவுடைய தாக்கும்.

வகுப்பறைக் கற்பித்தலில் பாடத் தைத் திட்டமிடுதலே ஆசிரியர்களின் தலை யாய பணியாக உள்ளது. பாடத்தைத்திட்ட மிடுவதற்கு மூன்று பிரதான கட்டங்களை அமைத்துக்கொள்ளல் அவசியமானதாகும்.

அவை,

1. குறிக்கோள்களைத் தெரிதலும், முன் ஆயத்தமும்.
2. குறிக்கோள்களை எய்துவதற்கான வழிமுறைகள் அல்லது பாடத்தைச் சமர்ப்பித்தல்.
3. செயற்பாட்டினை மதிப்பீடு செய்தல்

என்பனவாகும்.

என்ன விடயத்தை மாணவர்க்கு அளித்தல் ஊடாக மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கினை விருத்தி செய்ய லாம்? எடுத்துக்கொண்ட விடயத்தை எவ் வாறு கற்பிப்பது, அல்லது மாணவர் கற்க வழிகாட்டுவது? அதற்கான ஆயத்தங்கள் எவை? எவ்வகையான உபகரணங்களை அல்லது கற்பித்தற் துணைச் சாதனங்க ளைப் பயன்படுத்துவது? எவ்வகையான ஒழுங்கில் விடயங்களை மாணவர் மத்தி யில் சமர்ப்பிப்பது? மாணவர்கள் பெற்றுக் கொண்டதை எவ்வாறு மதிப்பீடு செய்வது? அல்லது கணிப்பீடு செய்வது ஆகிய சிந்த னைகளின் அடிப்படையில் எழுவதே பாடத் தைத் திட்டமிடல் ஆகும்.

ஆசிரியர் ஒருவர் ஒரு விடயத் தைக் கற்பதற்கு மாணவர்களுக்கு வழி காட்டுதல் தொடர்பாக மேற்கண்ட வினாக் களுக்கு அளிக்கப்படும் விடைகளானது சிறப்பானதொரு பாடத்திட்டமிடலாக அமையும்.

## பாடத்திட்டமிடலுக்கான படி முறைகள்

பாடத்திட்டமிடலானது பின்வரும் படிமுறைகளின் வழியாக அமைத்துக் கொள்ளப்படலாம்.


1. பாட அலகினைத் தீர்மானித்தல்.
2. பாடப் பொருளின் அளவினைத் தீர்மானித்தல்.
3. நோக்கங்களைத் தீர்மானித்தல்.
4. பொருத்தமான கற்பித்தல் முறைகளைத் தெரிவு செய்தல்.
5. கற்பித்தற் துணைச் சாதனங்களைத் தெரிதல்.
6. மதிப்பீட்டு, கணிப்பீட்டு முறைகளைத் தெரிவுசெய்தல்.
7. பாடக்குறிப்பினைத் தயாரித்தல் என்பனவாகும்.

### 1. பாட அலகினைத் தீர்மானித்தல்:

பாடத் திட்டமிடலின் முதற் பணியாகப் பாடஅலகினைத் தீர்மானித்தல் அமைகின்றது. பாடசாலைகளில் பொதுவாக ஒவ்வொரு பாடத்திற்குரிய ஆண்டுச் செயற்றிட்டங்கள் அவ்வாண்டு ஆரம்பத்திலேயே தயாரிக்கப்படுவது வழமையாகும்.

ஆண்டுச் செயற்றிட்டம், வருடம், தவணை, மாதம், வாரம், நாள் என்ற அடிப்படையில் தயாரிக்கப்படுவதால் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் பாட அலகினைத் தீர்மானித்தலில் சிரமங்கள் ஏற்படமாட்டாது.

பாடசாலைகளில் ஆண்டுச் செயற்றிட்டம் காணப்படாவிடின் பாடத்திட்டங்கள், பாட்வழிகாட்டிகள், ஆசிரியர் கைநூல்கள், பாடநூல்கள் என்பவற்றின் உதவியுடன் ஆண்டுச் செயற்றிட்டத்தை ஆசிரியர்கள் அமைத்துக்கொள்ளவும் முடியும்.



எவ்வாறு இருப்பினும் பாட அலகி னைத் தீர்மானிப்பதில் அதனைக் கற்பிக்கும் ஒழுங்கு முறையை மாற்றிய மைப்பதில் ஆசிரியருக்குப் பூரண சுதந்திரம் உண்டு.

ஆசிரியர்கள் மாணவர்களின் தயார் நிலை, மாணவரின் முன்னறிவு, முதிர்ச்சி, வயது மட்டம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு பாட அலகினைத் தீர்மானித்தல் வேண்டும்.

## 2. பாடப் பொருளின் அளவினைத் தீர்மானித்தல்:

பாடத்திட்டமிடலில் பாடப் பொருளின் அளவினைத் தீர்மானித்தல் என்பது மிக முக்கியமான ஒரு படியாகும். மாணவர்களின் நிலைக்கு ஏற்பவும், மாணவர்களின் தேவைக்கு ஏற்பவும் பாடப் பொருளின் அளவினைத் தீர்மானிக்க வேண்டும்.

ஆசிரியர் தனக்குத் தெரிந்த வற்றை எல்லாம் மாணவர்களுக்குக் கூறு தலும், மாணவர்களுக்குத் தேவையான விடயங்களுக்கு அழுத்தம் கொடுக்காமல் இருப்பதும் மாணவரின் இயலளவுக்கு மேலாக வலுக்கட்டாயமாகத் திணிக்க முற்படுவதும் ஆசிரியரைப் பொறுத்த வரையிலும், மாணவரைப் பொறுத்தவரை யிலும் வீண் விரயமான முயற்சிகளாகவே அமையும். ஆகவே பாடப்பொருளின் அளவை முன்கூட்டியே தீர்மானித்தல் அவசியமானதாகும்.

பாடப்பொருளின் அளவினைத் தீர்மானிக்காது விடின் பாடவேளையில் நேரம் எஞ்சியிருத்தல் அல்லது நேரம் பற்றாக்குறையாக இருத்தல். அடுத்த ஆசிரியரின் பாடவேளையை அபகரித்தல். மாணவரின் கற்றல் வேகத்திற்கு ஏற்பக் கற்பிக்க இயலாதநிலை தோன்றுதல் வகுப்பறைகளில் மாணவர்களின் கட்டுப்பாடு குலைவுறுதல் போன்ற குறைபாடுகள் எழலாம்.

ஆகவே பாடவேளைக்குரியதா கவும் பாடத்தின் நோக்கத்தினை அடையக் கூடியதாகவும் பாடப்பொருள் அளவினைத் தீர்மானிக்கவேண்டும்.

மேலும் கற்றல் கற்பித் தற் திட்டமிடலை ஒழுங்கமைக்க அடுத்த இதழைப்பாருங்கள்.

**யார் இவர்?**



செங்கொடிக்கும், அரிவாள் சுத்தியலுக்கும், அடுத்தபடியாகப் பொதுவுடமை வாதிகளின் சின்னமாக மாறியவர் இந்த சேகுவேரா

சேகுவேராவின் புகழுக்குக் காரணம் பொதுவுடமை வாடையையே வெறுக்கும் அமெரிக்கக்கண்டத்தில் பொதுவுடமை விதையைத் தூவியவர்.

பிடல்கஸ்ட்ரோ பொதுவுடமை ஆட்சியை கியூ பாவில் உருவாக்குவதற்கு இந்த சேகுவேராதான், அடித்தளம் அமைத்தார். ஆர்ஜென்ரீனாவில் செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்தவர். மருத்துவம் படித்தவர். ஆனால் காலம் அவருக்கு வேறொரு பாடத்தைக் கற்றுத்தந்தது. இவரது திறமையான கெரில்லா யுத்தத்தால் கியூபாவின் ஆட்சியை பிடல் கஸ்ட்ரோ கைப்பற்றினார். ஆனால் அவர் எந்த உயர் பதவியையும் வகிக்கவிரும்பாமல் பொதுவுடமைக் கொள்கையை விரும்பும் மக்களுக்கு உதவுவதில் தனது காலத்தைப் போக்கினார்.

# மலர்களைப் புரிந்துகொள்



இது ஒரு புனிதமான யாத்திரை
இப்புனித யாத்திரையில் பயணிக்கும் - உன்
பாதங்கள் மிகமிகப் புனிதமானதாகட்டும்
இதைப் புரிந்துகொள்
புனிதமாக்கு

சக்தி மிக்கதொரு சந்ததியைப் பிரசவிக்கப்
புறப்பட்ட சிந்தனைச் சிற்பி நீ
தெரிந்துகொள்
உன் சந்ததிக்கு வரும் மலர்களெல்லாம்
விதவிதமான வாசனைமிகு வீரிய மலர்கள்
விளங்கிக்கொள்

பக்குவமாய் ஒவ்வொன்றையும்
பார்த்தெடுத்து
பாசமெனும் வாசமிகு நார்கொண்டு
பாருக்கு நல்மாலைகள்
பலவிதமாய் ஆக்கவல்ல
பக்தனாக உன்னையே ஆக்கிக்கொள்
பக்குவப்படுத்த மறந்திடில்
நீ பாசநார் தொடுக்க மறுத்திடில்
வாசம் மறைந்து எல்லாம்
வாடிப்போய்
தேடுவாரற்று தேங்கிப்போய்விடும்
புரிந்துகொள்

மலர்கள் கூறும் கதைகளை
மனதார வாங்கிக்கொள்
மனதை நெருடும் நெகிழவைக்கும்
மானுடம் தழைக்க நீ உழை.

சு. ப. சாந்தகுமாரி. ஆசிரியை
மு/ கூழாமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.
ஒட்டுசுட்டான்.

# ஒரு சூரியனும், தாமரைப்பூக்களும்



குழந்தைகளைக் குளிப்பாட்டு வதிலிருந்து வெளிக்கிடுத்தி பாடசாலைக்கு அனுப்பும் வரை ரங்கநாதன் பம்பரமாகச் சுழன்றுகொண்டிருந்தான். படுக்கையறையில் மனைவி இருமுவதும், மருந்துப் போத்தலையோ, குளிகைப் போத்தலையோ எடுப்பதற்கு சிரமப்படுவதும், ரங்கநாதனுக்கு விளங்குகிறது. இன்னும் அரை மணிநேரம் தான் இருக்கிறது. அதற்கிடையில் பிள்ளைகளை ஆயத்தப்படுத்தி பாடசாலைக்கு போகவிட்டு மனைவிக்குத்தேவையான காலைச் சாப்பாட்டை ஒழுங்குபடுத்தி சாப்பாட்டின் பின்னர் குடிக்க வேண்டிய மருந்துகளை எடுத்துக்கொடுத்த பின்பே அவசர அவசரமாக வெளிக்கிட வேண்டும்.

பிட்டும், முட்டைப்பொரியலும் தொண்டைக்குள் இறுகியது. "அப்பா போட்டுவாறோம்." என்று கூறி பள்ளிக்கூடம் கிளம்பிய பிள்ளைகளுக்கு "போட்டு வாங்கோ" என்று கூற எத்தனிக்கும் போது புரைக்கேறியது. கடிகாரத்தைப் பார்த்தான். இருபது நிமிடங்கள் தான் இன்னும் இருக்கிறது. சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதியாக எழும்பினான். மனைவியின் இருமற்சத்தம் படுக்கையறையில் அதிகமாகக் கேட்கிறது. நேற்றிலிருந்து அவளுக்கு உடல்நிலை மோசமாக இருப்பதை ரங்கநாதனும், அவதானித்தான். ஆனால் அவளை டொக்டர் வந்து பார்வையிட்டுப் போகும்போது கூறிப்போனது அவனுக்குத் தெம்பூட்டுவதாகவே இருந்தது. அதற்காகவே அவர் அப்படிக் கூறினார் என்பதும் ரங்கநாதனுக்கு விளங்கியது. கடந்த மூன்று மாதங்களாகப் படுத்த படுக்கையாகிவிட்ட அவளுக்கு என்ன வியாதி என்பதை இன்னமும் எந்த வைத்தியர்களாலும் கண்டுகொள்ள முடியவில்லை. அவள் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு அங்குலமாக ஒடுங்கிப்போகிறாள்.

இன்னமும் பத்து நிமிடங்கள் தான் இருக்கிறது. அதற்கிடையில் ஆயத்தமாகிப் பாடசாலைக்குப் போகவேண்டும். கட்டிலிற் கிடக்கும் மனைவியைப் பார்த்தான். அவள் தூங்கிவிட்டிருக்கவேண்டும். ஏன் குழப்புவான். என நினைத்து வெளியே வந்தான். பின் உள்ளே போய் அவளுக்கு வேண்டிய மருந்துகளை எடுத்து வைத்தான். முகத்தில் எந்த சலனமும் அற்ற உறக்கத்தில் அவள் கிடந்தாள். ரங்கநாதனுக்கு திடீரெனப் பயம் நெஞ்சை கவ்விக்கொண்டது. மூக்கில் விரலை வைத்துப்பார்த்தான் கைகளைப்பிடித்து நாடியைப் பார்த்தான். அப்பாடா என்றிருந்தது. மூச்சு வருகிறது...... அவள் கண்களை மெதுவாகத் துறந்து அவனைப் பார்த்தாள் இன்னும் பள்ளிக்கூடம் போகவில்லையா? என்று கண்களால் கேட்டாள். இதோ போகிறேன் என்றுகூறி அறையை விட்டு வெளியேறினான்.

ஊிரிலிருந்தால் உறவுகளெல்லாம் அருகிலிருக்கும். படுத்த படுக்கையாகிவிட்ட மனைவிக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கும். இவ்வளவு தூரத்திலிருந்து கஸ்ரப்படவேண்டியிருக்கிறதே! மாற்றத்தை எடுத்துக்கொண்டு ஊருக்குப்போகலாம் என்றால் இந்தமுறை ஓ.எல். வகுப்புக்கான பாடங்களை முடிக்காமல் வெளிக்கிட

யியலாது. பிள்ளைகளும் பாவந்தானே. எல்லாப் பிள்ளைகளும் என்னை நம்பி இருக்குதுகள். மனைவியைப் பார்க்கிற தற்கு வயதான அம்மா ஒராளைப் பிடிச்சுத் தாங்கோ என்று சொல்லி நானும் களைச் சுப்போனேன். இனி நான்தான் நேரில இறங்கவேணும்.

சைக்கிளை எடுத்து தெருவில் இறங்கினான். ஒரே புழுதி மயம். கெதில நான் படுக்கையில்தான் கிடக்கவேண்டி வரும். அவன் நினைத்துக்கொண்டான்.

முதுகில் வெயில் சுள் என்று சுட்டது. வெனியன் வியர்த்து ஈரம் சேட்டில் பரவியது. விளாஸ் விளாஸ் என்று புழுதியை விசுக்கியபடி வாகனங்கள் போனது. நாசமாய்ப் போன புழுதி இப்ப டியா மூக்கு, வாய், தலை எல்லாம் படி கிறது. விருப்பமாய் போடும் லைற்புளூ சேட் பிறவுணாக மாறிக்கொண்டிருந்தது. நேரம் எட்டுப் பதினைந்து ஆகிவிட்டது. மணி அடித்து முதலாம் பாடம் தொடங்கியிருக்கும் ஆறாம் வகுப்பிற்கு அழகியற்பாடம் இண்டைக்கு அச்சுப் பதித்தல் செய்கிறதுக்கு இலகுவானதும் வீட்டில் கிடக்கும் கழிவுப்பொருட்களாகவும் கொண்டு வரச்சொன்னனான். சயந்தன்தான் வெண்டிக்காயும், வாழைத்தண்டும் கொண்டு வாறன் என்று சொன்னவன். விக்கினேஸ் குரும்பட்டியும், வாழைக்காயும் கொண்டு வாறன் என்றவன். செருப்பின்ற அடிப்பா கத்தை துண்டுதுண்டாக வெட்டி கொண்டு வருவதாக ரமணி சொன்னவள். இப்ப எல்லோரும் என்னைப் பார்த்துக்கொண்டு நிற்கினம். மற்ற வகுப்புகளுக்கு ரீச்சர் போக என்னையும் எதிர்பார்த்து தாங்கள் கொண்டுவந்த பொருட்களுடன் ஆவலாக காத்திருப்பார்கள். இன்று அந்த பாடவேளை "கட்" தான் என்னுடைய உயிரை உருக்கி இந்தச் சைக்கிளை உழக்கினாலும் அது என்னை இப்ப கொண்டுபோய் சேர்க்காது.

ந. கோணேஸ்வரன்
மு/வல்லிபுனம் அ.த.க. பாடசாலை.

ஏன் சேர் ஒரு மோட்டார் சைக்கிள் எடுங்கோவன் என்று பள்ளிக்கூட ரீச்சேஸில் இருந்து எல்லோரும் கேட்பினம். அவ னுக்கும், அவ்வாறு ஒரு எண்ணம் இருந்ததுதான். அதற்காகவே பத்துமாதக் கடனும், வங்கியிலிருந்து கொஞ்சக் காசு எடுத்து ஆயத்தப்படுத்த திடீரென அவனது மனைவி மயக்கம்போட்டு விழுந்தாள். ஆஸ்ப்பத்திரிக்கு கொண்டுபோனபோது அவசர சிகிச்சைக்கென அம்புலன்சில் ஏற்றி வவுனியா, கொழும்பு ஈறாக கொண்டு திரிந்து கையிலிருந்த காசெல்லாம் முடிந்தது தான் மிச்சம் மனைவியோ படுத்த படுக்கையை விட்டு இன்னமும் எழவில்லை. அதோடு மோட்டார்ச் சைக்கிள் ஆசையும் முடிந்தது.

இன்னும் ஐந்து நிமிடங்கள் ஓடினால் பள்ளிக்கூடம் வந்துவிடும். அதிபர் சிவத்தக்கோடு போட்டிருப்பார். எழும்பி நின்று உழக்கவேண்டும்போல இருந்தது. ஆனால் பார்க்கிற சனம் எதாவது சொல்லும் என நினைத்து விட்டுவிட்டான்.

முதற்பாட வேளை முடியும் நேரம் ரங்கநாதன் வந்து சேர்ந்தான். அதிபர் ஒரு மாதிரியாகப் பார்த்தார். அவனோ கையெ முத்தை வைத்துவிட்டு நேரே ஆறாம் வகுப்புக்குப் போனான். அங்கே கணித பாடம் நடந்துகொண்டிருந்தது. சிவனேசன் மாஸ்ரரின் அருகில் இரண்டு பேர் அழுது கொண்டிருந்தார்கள். பெண்பிள்ளைகள் கொப்பிகளைக் காட்டுவதற்காக முண்டி அடித்தார்கள். ரங்கநாதனைக் கண்டதும் ஏக்கத்தோடு பார்த்தார்கள். "ஏன் சேர் எங்கட பாடத்திற்கு வரவில்லை." என்று கேட்பதுபோல் இருந்தது. சிவனேசன் மாஸ் ரரிடம் அனுமதி பெற்று வகுப்புக்குள் போனான். நான்முந்தி நீ முந்தி எனப்

பிள்ளைகள் தங்களது உபகரணங்களைக் காட்டினார்கள். சயந்தன் வெண்டிக்காயும், வாழைத்தண்டும் விக்கினேஸ் குரும்பட்டி என்று சொன்னது சொன்னபடி கொண்டு வந்திருந்தார்கள். குறித்த பாடவேளையில் வந்து ஆவலோடு படிக்க வந்திருந்த பிள்ளைகளுக்குப் பாடத்தை படிப்பிக்கவில்லையே. என மனம் நொந்தான். “பிள்ளைகள் ஏதும் பாடம் பிறியாக இருந்தால் என்னிட்ட வாங்கோ, நான் வந்து பாடம் எடுக்கிறேன்.” என்று கூறி பத்தாம் வகுப்பிற்குப் போனான். போன கிழமையும் லீவு எடுத்ததால் பத்தாம் வகுப்புக்குரிய பாடங்களை கனநாள் எடுக்கவில்லை. “சிலபஸ்” கனக்க முடிக்கவேண்டியிருக்கு. என நினைத்தவாறு போனபோது சுரேஸ் ஓடி வந்தான் “உங்கள அதிபர் ஒப்பீசுக்கு வந்திட்டுப் போகட்டாம்” என்றான். சரி இன்றைக்குப் பத்தாம் வகுப்பிற்கும் பாடம் இல்லை. ஆனால் அலுவலகத்தில் அதிபருக்கும், உதவி செய்யத்தானே வேணும். என எண்ணியபடி அலுவலகத்தினுள் நுழைந்தான். “ரங்கநாதன் வாறகிழமை சிலவேளை ரீம் வந்தாலும் வரும். இந்தச் சுவரில பாடசாலையின் கட்டமைப்பு ரீச்சர்மாரின் லீவு விபரம் எல்லாம் எழுதித் தொங்க விடவேணும். இன்றைக்கு அதை ஒருக்காச் செய்யுங்கோ” என்றார்.

அதிபர் கொடுத்த வேலைகளைச் செய்துமுடிக்க நாலைந்து பாடவேலைகள் கடந்துபோயின. ஆறாம் வகுப்பு சயந்தன் இதற்கிடையில் இரண்டு மூன்று தடவைகள் அலுவலகத்தை வந்து எட்டி எட்டிப் பார்த்துவிட்டுப் போனான். சயந்தனின் வெண்டிக்காய் காய்ந்து கொண்டு போகிறது போல அதுதான் அவன் அது காய்ந்து வத்தலாகிப் போகுமுன்னர் என்னைக் கூட்டிக்கொண்டுபோய் அச்சுப்பதித்து பார்த்துவிட வேண்டும். எனத் துடிக்கிறான். விக்கினேசின் குரும்பட்டி முகிழ் கழன்று ஒடுங்கிப்போய் இருக்கும். ரமணி சோர்ந்து போய் இருப்பாள்.

அலுவலக நேரம் முடித்து வெளியே வர ரங்கநாதனின் மனம் அவசரப்பட்டது. இன்று எப்படியாவது ஆறாம் வகுப்பு பிள்ளைகளுக்கு அச்சுப்பதித்தலை செய்துகாண்பிக்க வேண்டும். ஆனால் தொடர்ச்சியாக அந்த வகுப்பில் ஆசிரியர்கள் இடைவெளி இல்லாமல் பாடம் எடுத்துக்கொண்டு நின்றார்கள். ரங்கநாதனுக்கு களைப்பாக இருந்தது. கன்ரீனில் ரீ ஒன்றைக் குடித்துவிட்டு பத்தாம் வகுப்பிற்கும், ஆறாம் வகுப்பிற்கும் தகவல் அனுப்பினான். இரண்டு மணிக்குப் பின்னர் பிள்ளைகளை நிற்கும்படியும் தான் பாடம் எடுத்துவிட்டுத்தான் போவதாகவும், சொல்லி இருந்தான்.

இரண்டு மணிக்குப் பள்ளிக்கூடம் விட்டபின் ஆறாம் வகுப்பிற்குப் போனான். நிரோஜன் குங்குமத்தை தண்ணீரில் கரைத்தான். ரமணி செருப்புத்துண்டால் அச்சுப்பதித்தாள். சயந்தன் வெண்டிக்காயை வெட்டி, கொண்டுவராத வேறு சிலருக்கும் கொடுத்தான். விக்கினேஸ் பரவுருவ அலங்காரம் அச்சுப்பதித்தல் மூலம் செய்து காட்டினான். அவர்கள் பசியை மறந்து போனார்கள். முழுக்கமுழுக்க மகிழ்வாக அழகியற் பாடத்தில் மூழ்கிப்போனார்கள். ரங்கநாதன் பத்தாம் வகுப்பிற்கு மாதிரி வினாத்தாள் கொடுத்தான். வகுப்பு முடிந்து வெளியேற மூன்றரை மணியாகிவிட்டது. வழமையாக இரண்டு மணிக்கு பாடசாலை விட்டால் வீடுபோய்ச்சேர மூன்று மணியாகும். பசி வயிற்றைக் கிள்ளியது. சைக்கிள் ஓட ஒரு மணிநேரம் செல்லும். சாப்பிட நாலரை மணியாகும். போன அல்சர் திரும்ப வந்துவிடும்.

அப்போதுதான் தனது பிள்ளைகளினது எண்ணம் மேலெழுந்தது. ஐயோ இவ்வளவு நேரமும் அவர்கள் என்ன செய்தார்களோ எனக்காகக் காத்திருப்பார்களே அவசர அவசரமாக சைக்கிளை ஓட்டினான். ✪

# எண் ஒன்றின் நிறை வர்க்கம் காணும் புதியவழி

மறவன்புலோ சாவகச்சேரியை நிரந்தர முகவரியாகக் கொண்ட சிதம்பரப்பிள்ளை சிவதாசன் அவர்கள் தற்போது புகையிரத நிலையவீதி கோண்டாவில் எனும் தற்காலிக முகவரியில் வசித்து வருகின்றார். தனிப்பட்ட முறையில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் சிறந்த ஆசிரியரான அவரது நிறைவர்க்கம் காணும் புதிய முறையை விளக்கு சஞ்சிகை மூலம் அறிமுகம் செய்கின்றோம். புதிய கண்டு பிடிப்புக்கள், புதிய ஆய்வுகள் வரவேற்கப்படுகின்றன. ஆசிரியர்களே நீங்கள் கற்றலிலும், கற்பித்தலிலும் ஈடுபடும் போது உங்கள் அனுபவம் மேலோங்குகிறது. பல புதிய ஆக்கங்களால் எதிர்காலத்தை விழிப்படையச் செய்யுங்கள். இக் கணித்தல் பற்றிய உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

"எண் ஒன்றின் நிறைவர்க்கம் காணும் புதிய ஒரு வழியினை இங்கு உங்கள் பார்வைக்குத் தருகின்றேன். இதன்மூலம் மாணவர்கள் எண் ஒன்றின் நிறைவர்க்கத்தினை மனத்தினால் விரைவாக செய்து முடித்துக்கொள்ளலாம். அவ்விதியினைப் பின்வரும் எளிய உதாரணம் மூலம் விளக்குகின்றேன்.

1) **13** என்ற எண்ணின் நிறைவர்க்கத்தினை அறிதல் $= 13^2$

* முதலில் முன் எண்ணாகிய ஒன்றினால் **(1)** பதின்மூன்று என்னும் அவ்விரண்டு எண்களும் **(13)** பெருக்கப்படும்.

  **1 x 13**
  **= 13**

* பின்னர் முன் எண்ணாகிய ஒன்றினால் **(1)** பின் எண்ணாகிய **(3)** மூன்று பெருக்கப்பட்டு மேலே பெறப்பட்ட விடையுடன் கூட்டப்படும்.

  **1 x 3**
  **= 3**
  **13 + 3**
  **= 16**

* பின்னர் கடைசி எண்ணாகிய மூன்றை **(3)** வர்க்கித்து மேலே பெறப்பட்ட விடையுடன் இறுதியில் எழுதப்படும்.

  $3^2$
  **= 9**
  **169**

எனவே $13^2 \Rightarrow 13 \times 1 + 1 \times 3$
$\Rightarrow 13 + 3$
$\Rightarrow 16 \; (3^2)$
$\Rightarrow 169$

**சி. சிவதாசன்**
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

2) $24^2 \Rightarrow 24 \times 2 + 2 \times 4$

$\Rightarrow 48 + 8$

$\Rightarrow 56$

$\Rightarrow \underline{16}$ ($\nearrow 4^2$)

576

குறிப்பு - இங்கு 16 இன் கடைசி எண் 6 எழுதப்பட்டு, முன்னால் இருக்கும் ஒன்று 56 உடன் கூட்டப்படும்.

1. ஓராமிடத்து எண்

$02^2 \Rightarrow 02 \times 0 + 0 \times 2$

$\Rightarrow 0 + 0$

$\Rightarrow 0$

$\Rightarrow 04 \leftarrow 2^2$

2. ஈராமிடத்து எண்

$22^2 \Rightarrow 22 \times 2 + 2 \times 2$

$\Rightarrow 44 + 4$

$\Rightarrow 484 \leftarrow 2^2$

3. மூன்றாம் இடத்து எண்

$222^2 \Rightarrow 222 \times 22 + 22 \times 2$

$\Rightarrow 4884 + 44$

$\Rightarrow 4928$

$\Rightarrow 49284 \leftarrow 2^2$

4. நான்காம் இடத்து எண்

$2222^2 \Rightarrow 2222 \times 222 + 222 \times 2$

$\Rightarrow 493284 + 444$

$\Rightarrow 493728$

$\Rightarrow 4937284 \leftarrow 2^2$

எனவே இவ்விதி உண்மையானது.

மேலும் சில உதாரணங்கள்

- $15^2 \Rightarrow 15 \times 1 + 1 \times 5$

$\Rightarrow 15 + 5$

$\Rightarrow 20$

$\Rightarrow 20$

$\underline{25} \leftarrow 5^2$

$\underline{\underline{225}}$

> "எமது தாயக மண்ணில் வரலாற்றுரீதியாக எமக்கு உரித் தான சொந்த மன்னில் நாம் நிம்மதி யாக சுதந்திரமாக, கௌரவமாக பாதுகாப் பாக வாழவேண்டும். என்பதே எமது குறிக்கோள். இதுவே எமது தேசத் தின் அபிலாசை".
>
> தேசியத்தலைவர் மேதகு. வே. பிரபாகரன்

- $18^2$ ⇨ 18 x 1 + 1 x 8
  ⇨ 18 + 8
  ⇨ 26
  ⇨ 26
  64 ← $8^2$
  **324**

- $29^2$ ⇨ 29 x 2 + 2 x 9
  ⇨ 58 + 18
  ⇨ 76
  ⇨ 76
  81 ← $9^2$
  **841**

- $34^2$ ⇨ 34 x 3 + 3 x 4
  ⇨ 102 + 12
  ⇨ 114
  ⇨ 114
  16 ← $4^2$
  **1156**

- $105^2$ ⇨ 105 x 10 + 10 x 5
  ⇨ 1050 + 50
  ⇨ 1100
  ⇨ 1100
  25 ← $5^2$
  **11025**

- $123^2$ ⇨ 123 x 12 + 12 x 3
  ⇨ 1476 + 36
  ⇨ 1512
  ⇨ 1512
  09 ← $3^2$
  **15129**



# கட்டிளமைப்பருவத்தில் ஏற்படும் மாற்றமும், தடுமாற்றமும்

மனித வாழ்விற்கு வரை விலக் கணம் கூறமுடியாது. இது பல இன் னல்கள், சவால்கள் நிறைந்தவொன்றாக காணப்படுகின்றது. இரவும் பகலும் போல. இன்பமும், துன்பமும் நிறைந்ததே வாழ்க்கை. இந்தப் பூமியிலே உள்ள ஒவ் வொரு மனிதனின் வாழ்க்கையும் ஒருவருக் கொருவர் முற்றிலும் மாறுபட்டது. இயந்திர மாக சுழலுகின்ற இக்கால மனிதனிலே பலவிதமான வேறுபாடுகள், மாற்றங்களை காணமுடிகின்றது. சிறுகுழந்தை முதல் முதுமைப்பருவம் வரை அதாவது கரு வறை முதல் கல்லறைவரை மனிதனிலே ஏராளமான மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்த மாற்றங்கள் எல்லாம் எம்மை ஏதோ ஒருவழிக்கு இட்டுச்செல்லுகின்றன. சில மாற்றங்கள் நல்லவற்றை நோக்கியும், சில தீயவற்றை நோக்கியும் மனிதனை இட்டுச் செல்வதை கண்கூடாகக் காண்கின்றோம்.

சாதாரண ஒரு மனிதனின் வாழ்வை எடுத்துக் கொண்டால் தாயின் கருவறையை (வயிற்றை) விட்டு வெளியே வந்தநாள் முதல் அவனது இறப்புவரையும் தினமும் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. இம்மாற்றங்கள் உடல், உள ஆன்மீக மாற்றங்களாகவும், வேறுபல மாற்றங்களா கவும் அமையலாம். இவ்வாறு சிறுபராயம் முதல் பலமாற்றங்கள் ஊடாக வளரும் குழந்தை கட்டிளமைப் பருவத்தை எட்டிப் பிடித்து விடுகின்றது. இங்கேதான் அவனு டைய வாழ்க்கையில் அனேக மாற்றங் களை அவதானிக்க முடிகின்றன.

கட்டிளமைப்பருவம் என்பது ஏனைய பருவங்களைவிட முக்கியமான பருவம். பதினொன்று அல்லது பனிரெண்டு வயது முதல் பதினெட்டு வயது வரையான வயதெல்லை இதில் அடங்கும். இப்பரு வத்தில் உடல், உள குணாதிசயங் களிலும் ஏராளமான மாற்றங்கள் நிகழும். இப்பருவத்தின் ஆரம்பத்தில் உடல் வளர்ச்சி அதிகமாகக் காணப்படும். பதி னொன்று முதல் பதினைந்து வயது வரை யான காலப்பகுதி கட்டிளமைப்பருவத்தின் முன்பகுதி, பூப்படையும் பருவம் எனப்படும். கட்டிளமைப்பருவம் ஆளுக்காள் வேறு படும். பெண்கள் 12, அல்லது 13 வயதிலே பூப்படைவர். ஆண்கள் பெரும்பாலும் 15 வயதிலே பூப்படைவர். ஆண் பெண் இருபா லாரிடத்திலும் பூப்படைதல் 2 அல்லது 3 ஆண்டுகள் வேறுபடலாம். இப்பருவத்திலே இருபாலாரும் உச்சமான உடலியல் மாற் றங்களைப் பெறுகின்றனர். இப்பருவத்திலே ஏற்படுகின்ற விரைவான வளர்ச்சி மனித வளர்ச்சியில் ஏற்படுகின்ற முக்கியமான மாற்றமாகும். உடல் வளர்ச்சி தீவிரம் அடையும். இப்பருவத்தில் பெண்களில் வளர்ச்சி வேகம் 9-12 வயதுக்கிடையில் உச்சநிலை அடைந்து பின்னர் மந்த நிலையில் நிகழ்கின்றது.

ஆண்களின் தீவிரவளர்ச்சி 12/13 வயதிலே ஆரம்பமாகின்றது. கட்டிளமைப் பருவம் மனவெழுச்சி உறுதியற்ற பருவம் இப்பருவத்தில் அடிக்கடி சமநிலையற்ற மனவெழுச்சிகளுக்கு ஆளாகின்றனர். பெரும்பாலான மனவெழுச்சிகளுக்கும்,

மனச்சிக்கல் களுக்கும் காரணம் இவர்களது உடல் அங்கங்கள் நல்ல சடுதியான மாற்றம் அடைவதாகும். உடல் அமைப்பின் துரிதவளர்ச்சியினை இவர்கள் ஏனைய இளைஞர் யுவதிகளோடு தங்களை ஒப்பிட்டுநோக்கி தாழ்வுச் சிக்கல்களுக்கு ஆளாகின்றனர்.

இப்பருவத்தில் உள்ளவர்கள் எப்போதும் தனித்து இயங்கவும், எதிர்ப்பாலாருடன் நெருங்கிப்பழகவும், அவர்களுடைய பாராட்டுக்களையும், புகழ்ச்சியையும், தமதாக்கிக்கொள்ளவும் விரும்புவர். அத்தோடு தமக்குப்புகழ் தரக்கூடிய எந்த வேலையோ, காரியமோ, தொழிலோ எதுவென்றாலும் அதில் தீவிரமாக ஈடுபடுவர். பெற்றோர் பெரியோர் தம்மைக் கட்டுப்படுத்துவதை விரும்பமாட்டார்கள். தமது சொந்த உணர்வுகள், விருப்பு வெறுப்புகளுக்குத் தாமே உரித்துடையோர் என்று கருதுவர். கட்டுப்பாடுகள் இவர்களுக்கு மிகவும் கசப்பாக இருக்கும். தாம் விரும்பியவாறு உடுத்தவும், உண்ணவும், செயற்படவும் விரும்புவர். இப்பருவத்தில் ஏனைய பிள்ளைகளைப்போல தாமும் எல்லா விதத்திலும் சமநிலையில் இல்லாதவிடத்து மிகவும் தாழ்வுச் சிக்கலுக்கு ஆழாகின்றனர். உதாரணமாக நல்ல விலையுயர்ந்த ஆடைகள் அணிய வசதியில்லாத போது வெளியிடங்களுக்கு செல்ல விரும்பமாட்டார்கள். இவர்களில் பெரும்பாலானோர் தமது நேரத்தை நண்பர்களுடன் சேர்ந்து அரட்டை அடிப்பதிலும், சந்திகளிலும், தெருக்களிலும் நின்று தேவையற்ற பகிடிவதைகளில் ஈடுபடுவதிலும், இன்னும் சினிமா, குடிபோதையிலும் செலவிடுகின்றனர். பெரும்பாலும் இப்பருவத்தில் இவர்கள் உறுதியற்றவர்களாக, தீர்மானங்களை எடுக்க முடியாதவர்களாக, விளையாட்டுப் பிள்ளைகளாக, இலட்சியமற்றவர்களாக காணப்படுகின்றனர். பள்ளிப் பருவத்திலே துள்ளித்திரிந்து ஆர்வமுடன் கல்விபயின்று தேறுவதற்குப் பதில், பாதாளத்தில் விழும்படியான பாதகச்செயல்களில் ஈடுபடுகின்றனர். எதிர்ப்பாலாரின் கவர்ச்சியும், இதற்கு முக்கியகாரணங்களில் ஒன்று. அநேகமான மாணவர்களிடத்திலே கட்டிளமைப்பருவம் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இப்பருவத்திலே நீர்க்குமிழி போன்று தோன்றி மறையும் சிறுசிறு ஆசைகளுக்கும், கவர்ச்சிகளுக்கும், பொழுபோக்குகளுக்கும் இடம் கொடுப்பதனால் சிறந்த முறையில் தமது கல்வியைத் தொடர முடியாமல் கஸ்ரப்படுகின்றனர். இப்பருவம் மாற்றங்களை மட்டுமல்ல தடுமாற்றங்களையும் ஏற்படுத்துகின்றது. உறுதியான முடிவுகளை எடுக்க முடியாமல் தடுமாறுகின்ற ஒரு காலமாகவும், இப்பருவகாலம் அமைகின்றது.

எடுத்துக்காட்டாக ஒரு சிறிய கதையைக் கூறலாம்.

எடிசன் என்பவன் வறுமையான ஒரு குடும்பத்தில் பிறந்து ஆறு பெண் சகோதரிகளுக்கு, ஒரே ஆணாகவும் வளர்ந்தான். நான்காவது குழந்தையான இவன் மாநிறம் கொண்ட அழகான தோற்றமுடையவன். விளையாட்டுவீரன், சுறுசுறுப்பு மிக்கவன். இவன் தரம் பத்திற் கல்வி கற்றபோது பெற்றோர் இவனைப் பாடசாலை விடுதியில் சேர்த்தனர். வீட்டில் கல்விகற்க வசதிகள் இருக்கவில்லை. நாட்டுநிலமையும் அதற்கு இடம் தரவில்லை. பாடசாலையில் கல்வி கற்ற வேளை அங்கே வேலை பார்க்கும் லக்சிக்கா அக்காவுக்கும் எடிசனுக்கும் இடையே சிறிய தொடர்பு ஏற்பட்டுள்ளது. இத்தொடர்பு அவனது உயர்தரப் பரீட்சை

அருட்சகோதரி செல்வி சீமான்.
ஆங்கில நெறி 2ம் வருடம்
பலாலி ஆசிரிய கலாசாலை.

வரை தொடர்ந்தது. இருவருக்குமிடையே உள்ள தொடர்பு வலுப்பெற்று வரும் வேளையில் பரீட்சையை முடித்துக்கொண்டு லக்சிக்கா அக்காவின் தொடர்பைச் சாதுரியமாகத் துண்டித்துவிடலாம் என அவன் நினைத்தான். ஏனெனில் பதினெட்டுவயதான அவனுக்கு எல்லாமே விளையாட்டாக அமைந்திருந்தது. ஆனால் பரீட்சைமுடியும் வரை காத்திருந்த லக்சிக்கா அவனை அணுகி முடிவைக் கேட்டபோது அவனது பேச்சில் மாற்றம் காணப்பட்டது. அது அவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. அவள் விடாப்பிடியாகத் தன்னை மணக்கும்படி வேண்டிக் கொண்டதால் இருவருக்கும் திருமணம் நிறைவேறியது.

நிரந்தர வேலையற்ற எடிசன் தனது குடும்ப வாழ்வை கொண்டு நடாத்த முடியாமல் திண்டாடினான். துள்ளித்திரிந்து சந்தோஷமாக வாழ்க்கையை அனுபவிக்கவேண்டிய வயதில் அவனது கால்களுக்குக் கட்டுப்போடப்பட்டது. தீர்மானங்களை எடுக்க முடியாத கட்டிளமைப் பருவத்தில் தடுமாற்றங்களும், சஞ்சலமுமுடைய தளர்ந்த மனப்போக்கும் அவனுடைய வாழ்க்கையைப் பாழாக்கிச் சந்தோஷத்தை இழக்கச்செய்தது. இப்பருவத்தில் உள்ள இந்த வயதினருக்கு சமுதாயத்தில் குடும்பங்களில் பாடசாலைகளில் வழிகாட்டிகளாக அமையும் ஆசிரியர்களும், பெற்றோர்களும், அன்பான வழிகளில் அவர்களை அணுகி அவர்களுக்கு உதவிகளைச் செய்து கொடுத்தால் அவர்களிடத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்துதல் சாத்தியமாகலாம். இப்பருவம் தடுமாறவைக்கும் பருவமாகும். எனவே ஆசிரியர்களாகிய நாம் அவர்களை நல்ல பாதையில் செல்ல வழிகாட்டுதல் அவசியமாகும்.

வழிகாட்டிகள் நற்குண நன்னடத்தை உடையோராய் மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு வாழ்தல். இப்பருவ வயதினருக்கு உதவும் உயர்ந்த செயற்பாடாகும்.

✳

## கடவுள் யார் பக்கம்

அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள தேவாலயம் ஒன்றில் பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது. ஆபிரகாம் லிங்கன் அதில் கலந்து கொண்டார். பிரார்த்தனை முடிந்து அவர் வெளியேறும்போது பாதிரியாரைச் சந்தித்து "எனக்கு வேண்டிய சக்தி கிடைத்துவிட்டது போய் வருகிறேன், நன்றி" என்றார். அங்கிருந்த ஒருவர் ஆபிரகாம் லிங்கத்தைப் பார்த்து "எதற்காகப் பிரார்த்தனை கடவுளை எதிரியின் பக்கம் செல்ல விடாமல் தடுத்து நமது பக்கத்திற்கு இழுப்பதற்காகத்தானே" என்றார். அதற்கு ஆபிரகாம் லிங்கன் "கடவுள் என் பக்கம் அல்லது எதிரியின் பக்கம் என்ற கருத்துக்கே இடமில்லை. ஆனால் நாம் கடவுளின் பக்கத்தில் இருக்கவேண்டும். அதற்காகத்தான் பிரார்த்தனை செய்கின்றோம்." என்றார்.



# ஆரம்பக் கல்வித்துறையின் வளர்ச்சியில் அதிகாரிகளின் பங்களிப்பு

ஒரு பிள்ளையைச் சமூகத்துக்குப் பொருத்தமான நற்பிரஜையாக்கி சூழலுக் கேற்ற கட்டுமானப் பண்புடனும், நற்பண் புடனும் அப்பிள்ளையின் வாழ்வியலை நெறிப்படுத்துவதில் முக்கிய பங்கினை வகிப்பது கல்வியாகும். மாடிக்கட்டிட மொன்றின் உறுதியான தன்மைக்கு வலு வூட்டுவதில் அத்திவாரம் எந்த அளவு பங்கினை வகிக்கின்றதோ அந்த அளவுக்கு உயர்கல்விக்கு வலுவூட்டுவதில் முக்கியபங்கினை வகிப்பது ஆரம்பக் கல்வியே என்பது சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல. இந்த வகையிலே உயர்கல்விக்கு வாழ்வாதாரமாக விளங் கும் ஆரம்பக்கல்விக்கு வலுச்சேர்த்துப் பலம் பெறச் செய்யவேண்டியது. துறை சார்ந்த அதிகாரிகளின் கடமையாகும். இவ்விடயத்தில் அதிகாரிகளின் கவனம் ஆரம்பக்கல்வித் துறையில் ஏற்படுத்தி யிருக்கும் தாக்கத்தைப் புடம்போடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பொதுவான பண்பு:

உலக நாடுகளில் மதிக்கத் தக்கதும் போற்றத்தக்கதுமான துறை ஆரம்பக்கல்வித்துறையே. இது கீழைத் தேய மேலைத்தேய நாடுகளுக்கும் பொருந் தும். இந்தியாவின் கல்வி அமைப்பை எடுத்துக் கொண்டால் அங்கு ஆரம்பக் கல்வி வரை மட்டுமே கல்வி இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் கல்வி யினை வழங்குபவர்கள், வழங்கும் நிறுவ னங்கள் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் ஆகியோரிடம் காணப்படுகின்ற வகை தெரியாத பலவீனம் கல்விக்கு அடித் தளமாக விளங்கும் ஆரம்பக்கல்வியின் வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துள்ளது. கல்வியின் மூலவளமாக விளங்கும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களைச் சமூகமும் இடைநிலை உயர்நிலைக் கல்வி ஆசிரியர் களும், பலவீனமாகக் கருதுகின்ற பண்பு வாழையடி வாழையாக நம் நாட்டில் நிலவி



வருகின்றது. அன்றும் இன்றும் ஆரம்பக் கல்வித்துறையிலேயே ஆளணிப்பற்றாக் குறை முடிவில்லாத தொடர்கதையாகி உள்ளது. இதற்குப் பல காரணங்கள் பல காலும் முன்வைக்கப்படுகின்றனவேயன்றி தீர்வு காணப்படவில்லை.

அரசாங்கம் ஆரம்பக்கல்விக்கெனப் போதியளவு ஆசிரியர்களை நியமிக் காவிடினும் ஓரளவுக்கேனும் ஆசிரியர்களை நியமித்து வருகின்றது. ஆனால் அரசின் கல்விக் கொள்கையில் நிலவும் வழுவும் தன்மையின் காரணமாக ஆசிரியர் பயிற்சி யின்போது இவ்வாறாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் வேறுதுறைகளை நாடிச் செல்கின்றனர். இதனால் ஆரம்பக்கல் வித்துறையிற் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை குறைவடைய மீண்டும் பாட சாலைகளில் பற்றாக்குறை நிலவுகிறது. இச்சந்தர்ப்பங்களில் வேறுபயிற்சிகள் பெற்றாலும் அவர்கள் தாம் கற்பித்த ஆரம் பக்கல்விப் பாடசாலைகட்கே நியமிக்கப் படுவதால் பெற்ற பயிற்சி வீண்விரயமா வதுடன் ஆரம்பக்கல்விப் பயிற்சி பெறாத இவ் ஆசிரியரின் கற்பித்தல் நடவடிக்கை இம்மாணவர்களின் செயற்பாட்டிற்கு வலுச் சேர்ப்பதாக அமைவதில்லை. இதைவிட ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தமது வாண் மையை வளர்ப்பதன் மூலமும் வெவ்வேறு துறைகளை நாடிச் செல்வதுமுண்டு.

ஆசிரியர் தமது வாண்மையை வளர்ப்பதன்மூலம் வேறு துறையை நாடிச் செல்வது பிழையானதல்ல எனினும், அர்ப் பணிப்புடனும், மனித நேயத்துடனும் வரை யறைக்குட்பட்ட காலப்பகுதிக்காவது ஆரம் பக்கல்வி மாணவர்களை நேசிப்பது மகிழ்ச் சிக்குரியதும், வரவேற்கத்தக்கது மாகும் இதற்கான மகிழ்ச்சிகரமான சூழலை உரு வாக்க வேண்டியது அதிகாரிகளின் கடமை யாகும்.

### யதார்த்த நிலை

ஆரம்ப ஆசிரியராக நியமிக்கப் பட்ட ஒருவர் பாடசாலை அதிபரின் மேற் பார்வையின் கீழ் ஏனைய சக ஆசிரியர் களினதும் முதன்மையாசிரியர்களினதும் வழி காட்டலில் கற்பித்தலில் ஈடுபடுகின்றார். குறிப்பிட்ட சில கால எல்லையின் பின்னர் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவ னத்தின் முழுமையான பயிற்சியைப் பெறும் நோக்கில் இரண்டு ஆண்டுகள் முறைசார் கல்வித்திட்டத்தின் ஊடாக பயிற்சி வழங்கப்படுகிறது. அதன்மூலம் அவர் பயிற்சிபெற்ற ஆசிரியராகிறார். தொடர்ந்து தனது வாண்மையை வளர்ப் பதன்மூலம் அவரது பதவி மேலும் வலுவூட் டப்படுகிறது. இந்நிலையில் அவ்வாசிரியர் துறைசார்ந்தரீதியில் வழங்கப்படும் உயர் பதவிகளான முதன்மை ஆசிரியர், ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர், ஆரம்பக் கல்வி விரிவுரையாளர் ஆகிய பதவிகள் அவரது திறமையை மதித்து வழங்கப்படாமை யால் யதார்த்தத்தில் "காத்திருந்தவன் பெண்ணை நேற்று வந்தவன் கொண்டு சென்ற கதை" யாக நிலைமை மாறுவதை கண்டு வேதனை உறுகின்றனர். துறைசாந்த திறமையற்றோரின் இத்தகைய நியமனங் களால் அத்துறை மேம்பட வாய்ப்புக்கள் இல்லாமற் போகின்றது. அதேவேளை துறைசார்ந்தோர் மனவிரக்தியுற்று தமது செயற்பாடுகளில் சோர்வடைகின்றனர். துறைசாந்தவர்கள் நியமிக்கப்படாத அதே வேளை துறைசார்ந்தோர் ஊக்குவிக்கப் படாமையும், ஆரம்பக் கல்வித்துறையின் வீழ்ச்சிக்குக் காரணமாகின்றது.

ஆரம்பக்கல்விக் கல்விமானிப் போட்டிப் பரீட்சையின்போது இப்பயிற்சிக் கெனத் தெரிவுசெய்யப்பட்டவர்களில் அனேகர் கணிதத்துறை சார்ந்தவர்களே எனலாம். கல்விப்பொதுத் தராதர உயர்தர




மு. விக்கினேஸ்வரன்
அதிபர்
யா/ உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை


கணிதப் பாடக் கலைத்திட்டத்தை மையப்படுத்தியே கல்வி மானிப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. இதனால் ஆரம்பக்கல்விப் பயிற்சியாளர்கள் பலர் கூடுதலாகப் பாதிக்கப்பட்டமை அறியப்பட்டுள்ளது. ஆரம்பவகுப்புப் பாடசாலைகளின் அதிபர் தேர்வு சம்பந்தமான போட்டிப் பரீட்சையிலும் இந்நிலைமையே காணப்படுகிறது. இவ்வாறான பாதிப்பு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுபோன்றே ஆரம்பக் கல்வி முதன்மை ஆசிரியர் நியமனமும் அமைந்துள்ளமையைக் குறிப்பிடலாம். இவ்வகைத் தேர்வுகள் ஆசிரியர்களை மட்டுமன்றி ஆரம்பவகுப்பு மாணவர்களின் கல்வியிலும் பாரியதாக்கத்தை உருவாக்கியுள்ளது. இத்தகைய குறைபாடுகள் களையப்படுவதன் மூலமே ஆரம்பக் கல்வித் துறையை சீர்செய்யமுடியும்.

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு அவர்களின் பதவிநிலைகளை வழங்கி ஊக்குவித்து அவ்வாசிரியர்களுக்கும் அவர்களின் துறைக்கும் அதிகாரிகள் ஊக்கம் கொடுக்கவேண்டும்.

ஆசிரியர் கலாசாலையில் ஆரம்பக் கல்வித்துறை சாராதவர்களே ஆரம்பக் கல்விப் பயிலுனராகவும், பயிற்றுனர்களாகவும், இருக்கின்றனர். எத்தனையோ கல்விச் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் பழைய கலைத்திட்டத்தையே இன்றும் போதிக்கும். நிலை தொடர்வதை அவதானிக்கமுடிகிறது. இதனால் பாடசாலைக் கற்றல் கற்பித்தலில் புரட்சியை ஏற்படுத்துவதற்கு மாறாக தேசியகல்வியியற் கல்லூரி ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்திற்கும், ஆசிரியர் கல்வி கலாசலைக் கலைத்திட்டத்திற்குமிடையே காணப்படுகின்ற பாரிய இடைவெளிகள் ஆரம்பக் கல்வித்துறையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை ஆகியவற்றுக்கிடையே பொதுவான ஆரம்பக்கல்வி கலைத்திட்டமொன்றை உருவாக்கி வலுப்பெறச்செய்ய வேண்டிய தேவை இன்று அவசியமானதாகும்.

ஆரம்பக்கல்வித் துறை வளர்ச்சியில் கல்வித்துறையோடு சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் முரண்பாடற்று ஒருமுகமாகச் செயற்படும் போதே நேசிப்புடன் கூடிய கல்விச் சமுதாயத்தை உருவாக்கமுடியும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை எனலாம்.

# வாசித்தோம் வாசிப்போம்



## ஆசிரியத் தொழிலிலிருந்து பிரியாவிடை

அரசினர் கல்லூரியிலே பன்னிரண்டு ஆண்டும், பதினான்கு நாட்களும், சேவையில் இருந்து 1959ம் ஆண்டு மாசி மாதம் பதினைந்தாம் தேதி ஓய்வு பெற்றேன். ஜனவரி மாதம் 8ம் திகதி ஓய்வு பெற்றிருக்கவேண்டும். பிறப்புப் பதிவில் காணப்பட்ட வித்தியாசம் காரணமாக இந்தச் சேவை நீடிப்பு இடம்பெற்றது.

ஐந்து அதிபர்களின் கீழ் சேவை செய்திருக்கின்றேன். முதலதிபர் ஏ.ஜே. இராசகாரியர். இவர் காரியாலயத்தில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இவர்மீதுள்ள மதிப்புக் காரணமாக வேலைகள் ஒழுங்காய் நடந்துகொண்டிருக்கும். எங்கும் அமைதிநிலவும். அவரது மனோசக்தி காரியாலயச் சுவர்களையும் ஊடுருவிப்பாயும்.

திரு. சபாரத்தினம் இவர் மெலிதாகச் சொல்லி அதிகம் வேலை வாங்கும் சுபாவம் உடையவர். திரு. நவரத்தினராசா இவர் விருந்துபசாரம் செய்யும் குணமுள்ளவர். உயர்ந்து பருத்ததோற்றப் பொலிவுபெற்றவர். நடந்துபோகும்போதே விடயங்களை அவதானித்துக்கொள்வார். பத்தொன்பது வயதிலேயே திருமணம் செய்துகொண்ட செல்லப்பிள்ளை இவர்.

திரு. ஏ.கே. கந்தையா இவர் அடிக்கடி ஆசிரியர்களின் அலுவல்களிலே தலையைப் போட்டுக்கொள்வார். ஆசிரியர் தங்கும் அறைக்குப் பலதரம் வருவார். ஓய்வுநேரங்களில் ஆறுதலாயிருக்கும் ஆசிரியர்களோடும் அவசியமின்றி மோதிக்கொள்வார். தான் ஒரு நிருவாகத் திறமையுள்ள மேலதிகாரி என்னும் எண்ணத்துக்கு அவர் அடிமைப்பட்டுள்ளார். இதுவும் மது போதைபோன்றது தான்.

''ஏகே'' இன் காலத்தில் ஆசிரியர்களின் மனமார்ந்த சேவை நின்றுபோயிற்று. எல்லாம் ஏட்டுச்சுரக்காய் ஆகிவிட்டது. தகாதமுறையில் இவர் தம்மோடு நடந்துகொள்வது பற்றி ஆசிரியர் பலர் என்னிடம் முறையிட்டு இதற்கு ஒரு வழி பண்ணுங்கள் என வேண்டிக்கொண்டார்கள். சரி என்று நான் சொல்லிக்கொண்டேன். மேசையைப் பார்த்தேன். மெய்கண்டான் தினக்குறிப்பின் முதல்நாள் இதழ் ஒன்று அங்கே கிடந்தது.

அதன் பின்புறத்தில் ஒரு பாடலை எழுதிவைத்துவிட்டு எனது வகுப்பிற்குச் சென்றேன். வகுப்பிற்குச் சென்ற சிறிது நேரத்தினுள் அந்தப் பாடல் பற்றிய கதை பள்ளிக்கூடம் முழுவதும் பரவிவிட்டது. பாடலைக் கந்தையாவும் கண்டுகொண்டார். நான் என்ன செய்வேன் உள்ளதைத்தான் சொன்னேன். இது அவருக்கும் நல்லது, ஆசிரியருக்கும் நல்லது, கல்லூரிக்கும் நல்லது. எனக்காக நான் இதனைச் செய்யவில்லை.

புலவர்மணி ஏ. பெரியத்தம்பிப்பிள்ளை அவர்கள் இந்நூற்றாண்டில் வாழ்ந்த ஈடிணையற்ற தமிழ்ப் புலவராவார். சிறந்த ஆசிரியரும், சமரசவாதியும், தன்னலமற்ற சமயப்பிரசாரகரும், மேடைப்பேச்சாளரும், தேசப்பற்றாளருமான இவர் ஒரு நடமாடும் பல்கலைக் கழகமாகும்.

மாண்புற்ற மட்டக்களப்பு தமிழகம் மகிமையுடன் பெற்றெடுத்து உலகுக்கு உவந்தளித்த மேதைகளின் ஒருவரான பேராசிரியர் பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் ஆசிரிய அனுபவத்திலிருந்து எழுதப்பட்ட இக் கட்டுரையை விளக்கு சஞ்சிகை பெருமையுடன் மீள்பிரசுரம் செய்கிறது.

தாம் வாழ்ந்த எழுபத்தொன்பது ஆண்டுகளில் சமய கலாச்சார அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டு உழைத்தவர். இவர் சிந்தாமணி வார இதழில் "உள்ளதும் நல்லதும்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையிலிருந்து வாசித்தவற்றை வாசகர்களுக்கு தருகின்றோம்.



# புலவர்மணி
## ஏ. பெரியதம்பிப்பிள்ளை

"சட்ட மென்பது வேசரி யேயதைத்
தழுவி நிற்பது வேசரி யேயிட்ட
சட்ட மென்ப ரகந்தைய ரேயதைத்
தாங்கு வோர்பழங் கந்தைய ரேயன்பாய்க்
கிட்ட வந்துநற் பண்பொடு வாழ்வரேல்
கிட்டும் நன்மையல் லாவிடி லோசட்டி
சுட்ட தும்கையை விட்டது மாய்விடும்
தொல்லையே யதற் கெல்லையு மில்லையே."

சட்டம் நல்லது சட்டத்தின்படி நடப்பதும் நல்லது. இட்டது சட்டம் என்று சொல்வோர் அகங்காரிகள். அதன்படி நடப்போர் பழைய கந்தையர்களே அன்பாக ஒருவரை ஒருவர் அணுகவேண்டும். பண்புடன் வாழவேண்டும். நன்மை உண்டாகும். இதற்குமாறாக நடந்தால் தீமையே விளையும். சட்டிசுட்டதும் கையை விட்டதுபோல் ஆகிவிடும்.

சட்டம் ஒரு கழுதை கழுதையின் முதுகில் எவ்வளவு சுமையையும் ஏற்றலாம். நினைத்தபக்கமெல்லாம் கொண்டு போகலாம். ஒரு சட்டத்திற்குப் பலவிதமான வியாக்கியானம் பண்ணலாம். நாவன்மை படைத்த ஒருவர் தமது விருப்பம்போல் அதைத் திருப்பலாம். சட்டம் என்பதுவே சரி - சட்டம் என்பது "வேசரி" வேசரி = கழுதை.

ஒரு நீதிமன்றத்தில் வழக்குவிசாரணை ஒன்று நடப்பதாக வைத்துக் கொள்வோம். முறைப்பாடுகாரரும், சாட்சிகளும், எதிரிக்கு மாறாக ஓரெழுத்தும் தவறாமல் சாட்சியம் அளித்துவிட்டார்கள். முரண்பாடு சிறிதும் இல்லை. ஆனால் எதிரி பக்கத்தின் விவாதம் வேறுவிதமாய் திரும்புகிறது. இந்த எதிரி ஒருமகான் இதோ இருக்கிறது அத்தாட்சிகள் இந்த முறைப்பாடுகாரரும், சாட்சிகளும், அயோக்கியர் இதோ ஆதாரங்கள்.

"கனம் நீதிபதி அவர்களே! இந்த அயோக்கியர்களின் சொல்லைக்கொண்டு

ஒரு மகானைச் சிறைக்கு அனுப்பப் போகின்றீர்களா! எதிரியை விடுதலை செய்யுமாறு தங்களைப் பணிவாக வேண்டுகின்றேன்" என்பது எதிர் விவாதம். எதிரி விடுதலையாகின்றான். இதுதான் சட்டம். சட்டத்தைத் திருப்பி விடுகிறார் சட்டத் தரணி. வேசரி திசை திருப்பிவிட்டது.

இன்னுமொரு உதாரணம். உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒரு வழக்கு நடப்பதாக வைத்துக்கொள்வோம். உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி சாட்சிக்கூட்டில் நிற்கிறார். எதிரிதரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்கிறார். எதிரிக்கு எத்தனை புசல் நெல்லுக் கோண்டுபோக அனுமதிப்பத்திரம் கொடுத்தீர்கள்! எழுநூற்றறைப்பது புசல் கொண்டு போக.

மேலதிகமாக எதிரி எத்தனை புசல் கொண்டு சென்றார்? முப்பத்தைந்து புசல். எல்லாமாக மொத்தம் எத்தனை மூடைகள்? முந்நூறு மூடைகள். எந்தெந்த மூடையில் எவ்வளவு எவ்வளவு மேலதிகமாக இந்த முப்பத்தைந்து மேலதிக புசலைக் கண்டுபிடித்தீர்கள்? மறு மொழியில்லை. எதிரி விடுதலை. மேலதிக நெல் அரசாங்கத்துக்கு உரியதாகிறது. சட்டம் திரும்புகிறது.

அதிபர் கந்தையா அவர்களே, சட்டம் ஒரு கழுதை. சட்டத்துடன் மனிதத் தன்மையும் வேண்டும். சட்டத்தால் ஆசிரியரை வருத்தாதீர்கள். அன்புக்கரம் நீட்டுங்கள். அதிகம் நன்மை வரும். இது ஒரு பெரிய கலாசாலை. முன்மாதிரி வேண்டும். இந்தக் கருத்தமைந்த பாடலால் கலாசாலையிலே ஒரு சுமுகமான போக்கு உண்டாயிற்று. எனது பாட்டும் கொழும்பு வித்தியா கந்தோர் வரையும் சென்றுவிட்டது.

திரு. கே. சிவசிதம்பரம். இவர் கரவெட்டியைச் சேர்ந்தவர். உண்மையிலேயே கரவெட்டிதான். கரவை எட்டிக் கனிபோல் வெறுப்பவர்கள் கரவெட்டி வாசிகள். மணியகாரர் முதலியார் சிற்றம்பலம் அவரின் புதல்வர் நல்லூர் முருகேச பிள்ளை உடையார், உடையாரின் புதல்வர் நல்லூர் எம்.பி., மு.சிவசிதம்பரம், மாவட்ட நீதிபதி சண்முகலிங்கம், டாக்டர் ம. முருகேசபிள்ளை, உதவி வித்தியாதிபதி எஸ்.கே.இராசசிங்கம், ஆசிரியர் வீ. கந்தப்பு முதலிய பண்பாளர்கள் இதற்கு உதாரண மாவர்.

கே. சிவசிதம்பரம் ஒரு பி. எஸ்சிப் பட்டதாரி. படிப்பிப்பதில் அதிகநேரம் செல விடுவார். நிருவாகத்திலும் நல்ல திறமையுள்ளவர். இவர் அதிபராயிருந்த காலத்தில் நான் ஓய்வுபெறக் கிடைத்தமை எனக்கு ஒரு பெரும்பேறாகும்.

எனது பிரியாவிடை வைபவத்தில் பொதுமக்களும் கலந்துகொள்ளும் வாய்ப்பினை அவர் நல்கினார். எனது உருவப் படத்தினைப் பெரிய அளவில் பெருப்பித்துக் கலாசாலை மண்டபத்திலே அதைத் திரைநீக்கம் செய்து வைக்க ஒழுங்கு செய்தார். தவத்திரு சுவாமி நடராஜானந்தா அவர்களை அழைத்து விழா வைத் தலைமை தாங்கிச் சிறப்பிக்கும் ஏற்பாட்டினையும் செய்து வைத்தார். அதிபர் சிவசிதம்பரத்தின் அன்பு என்னுடன் என்றும் வாழ்கின்றது.

எனது பிரியாவிடை வைபவத்தில் என் மனத்தைக் கவர்ந்த மூன்று சம்பவங்களை மிக்க நன்றியுடன் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். சுவாமியின் தலைமை உரையில், 'பண்டிதரின் ஒரு சொல் இராம கிருஷ்ண மிஷனுக்கு ஆறாயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்தது. அதுதான் சோம சுந்தர ஞாபகார்த்த மண்டபம்" என்று பேசும்போது உணர்ச்சி மேலீட்டால் அப் பெரியாரின் மூக்குக் கண்ணாடி கழன்று போய் சிறிது தூரத்தில் வீழ்ந்தது. இந் நிகழ்ச்சியை எனது பிள்ளைகள் இன்னும்

சொல்லிக் கொள்வார்கள். இது ஒரு சம்பவம்.

மற்றது மட்டக்களப்பு இராஜா ஸ்ருடியோ உரிமையாளர் திரு. கே. நடராஜா ஜே.பி. அவர்கள் எனது உருவப் படத்தைப் பெரிதாக்கி இலவசமாகக் கலா சாலைக்கு உபகரித்த பெருந்தகை.

அடுத்தது சிவசிதம்பரம் சொன்ன ஒரு சொல். "நேரத்துக்குச் சாப்பிட்டுக் கொள்ளுங்கள்" என்று அவர் சொன்ன அன்பின் சொல் எனக்கு ஜீவமந்திரம் ஆயிற்று.

மாணவர்கள் தனித்தனி வகுப்பாகவும், சங்கமாகவும், எனக்களித்த பிரியாவிடை வாழ்த்துக்கள் பல. அங்கெல்லாம் அவர்களின் அன்பு வெள்ளம் கரை புரண்டு ஓடிய காட்சி இருபது வருடம் சென்றும் என்னுள்ளத்தே புதுமை பெற்றுக் கிடப்பதை நான் இன்றும் காண்கின்றேன். அவர்கள் தாமே இயற்றி எனக்களித்த கவிதைகளாகிய மழலைச் செல்வங்களுள் இரண்டை இங்கே தருகின்றேன். பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவர்களின் தமிழார்வத்துக்கு வாசகநேயர்கள் இவ்விரண்டையும் உதாரணமாகக் கொள்க.

"சாதியென்றும் மதமென்றும் பேத மின்றிச்
சன்மார்க்க நெறிமுறையில் வாழ்ந்த ஞானி
நீதியுரை சாற்றியறி யாமை நீக்கி
நெறிமுறையில் மாணவரைத் திருத்தி இந்த
மேதினியில் தமிழர்வாழ் தேச மெல்லாம்
மேன்மைபெறு சேவையினைப் புரிந்த தியாகி
ஆதியிலே தமிழ்வளர்த்த சங்க மதன்
அறிஞர்வழித் தோன்றலென அறியச் செய்தார்."

இந்தச் செய்யுளிலே "சங்கமதன்" என்னும் தொடரிலே ஒரு அசை குறைந்து இது மாணவரின் சிருட்டி என்பதை விளக்கி நிற்பதை நேயர்கள் காண்க. அடுத்த செய்யுள் ஒரு வெண்பா.

"முந்திப் பிறந்து முடிகொண்ட செந்தமிழைச்
சந்தி சிரித்த சமயத்தே – தந்தாய்
புலவர்மணி ஐயாவே போகின்றீர்; விண்ணில்
எழில் நிலவு போனால் இருள்"

மாணவர்கள் கூறிய உருக்கமான இச்சொற்கள் அவர்கள்மீது நான் வைத்திருந்த அன்பின் பிரதிருபமாகும். எனது சேவையின் மதிப்பீடாக அவை அமைந்துள்ளன. அரசினர் கல்லூரியில் நான் இருந்த பன்னிரண்டு வருடகாலத்தில் பத்துவருடம் வைத்திய விடுமுறை பெறாமல் சேவையாற்றினேன.

" இனியருட் கடலே ஏழையேன் என்னால்
இங்கொரு செயலிலைஞு பயண
அனுமதிச் சீட்டும் செலாதினி; "விசா"வும்
முடிந்ததென் றறிவிலேன் இருந்தேன்;
புனிதனே எனது 'விசா' வினை நீட்டிப்
புதுப்புது வினைசெயப் பணிப்பாய்;
உனதுபே ரறிவின் முன்புகூ னியம்யான்;
உணர்கிலேன் உன்விளை யாட்டே"

எனது சர்வ சமய சமரசப் பதிகத்தில் வந்துள்ள இப்பாடல் இதை நினைந்து எழுந்ததே. பயண அனுமதிச் சீட்டு "பாஸ்போட்" இது எனது உடம்பைக் குறிக்கும். "விசா" எனது ஆயுட்காலத்தைக் குறிக்கும்.

**பணிப்பாளர்கனே!**

☆

*கற்கவேண்டும் என்ற ஆர்வ உந்துதலை. மாணாக்கரிடம் ஏற்படுத்தாமல் போதனை செய்ய முயலும் ஆசிரியர். சூடில்லாத இரும்பினைச் சுத்தியல் கொண்டு அடிப்பவராவார்.*
– ஹோரஸ் மன்

## அகில உலக ஆசிரியர் நாளையொட்டி சுவாமி விபுலாநந்தர் அவர்களின் நினைவாக விளக்கு சஞ்சிகை நடாத்தும் எழுத்தாக்கப் போட்டிகள் – 2004







**அதிபர்களே!**

**ஆசிரியர்களே!**

அகில உலக ஆசிரியர் நாளையொட்டி விளக்கு சஞ்சிகை, எழுத்தாக்கப் போட்டிகளை நடாத்தி முதல் மூன்று இடங்களைப் பெறும் ஆக்கங்களுக்கு பரிசுகள் வழங்கத் தீர்மானித்துள்ளது. உங்கள் ஆற்றல்கள் வெளிப்பட எழுத்தாக்கப் போட்டிகளில் கலந்துகொண்டு, எழுதுங்கள்.

**1. கட்டுரை எழுதுதல்:-**

தலைப்பு:- சுவாமி விபுலாநந்தர் அவர்களின் கல்விப்பணி

அளவு: A4 தாளில் 400 சொற்களுக்குக் குறையாமலும், 750 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பரிசுகள்:
- 1ம் பரிசு - 10000.00
- 2ம் பரிசு - 7500.00
- 3ம் பரிசு - 5000.00

**2. சிறுகதை ஆக்கம்:-**

விடயம்: தமிழீழ கல்விப்புல சமகால நிகழ்ச்சிகளை ஒட்டியதான கருத்துச்செறிவுள்ள விடயங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

அளவு: A4தாளில் 400 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

பரிசுகள்: 1ம் பரிசு - 10000.00
2ம் பரிசு - 7500.00
3ம் பரிசு - 5000.00

**3. கவிதை ஆக்கம்:-**

விடயம்: தமிழீழ கல்விப்புலம் சார்ந்த கவிதை வடிவங்களாகஅமைதல் வேண்டும்.

அளவு: மரபுக்கவிதை 24 அடிகளுக்குமேற்படாது இருத்தல் வேண்டும்.
புதுக்கவிதை 40 அடிகளுக்குமேற்படாது இருத்தல் வேண்டும்.

பரிசுகள்: 1ம் பரிசு - 5000.00
2ம் பரிசு - 3000.00
3ம் பரிசு - 2000.00

**4. விமர்சனம் எழுதுதல்:-**

விடயம் : 2003 அக்டோபர் மாதத்திலிருந்து மீண்டும் வெளிவந்த விளக்கு சஞ்சிகைகள் பற்றிய விமர்சனக் கட்டுரை ஒன்று.

அளவு: A4 தாளில் 400 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

பரிசுகள்: 1ம் பரிசு - 5000.00
2ம் பரிசு - 3000.00
3ம் பரிசு - 2000.00

மேலும் போட்டியில் மிகச் சிறப்பானதாகத் தெரிவு செய்யப்படும் ஆக்கங்களை விளக்கு சஞ்சிகையில் பிரசுரிப்பதுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்போட்டிகளில் கல்வித்திணைக்கள அலுவலர்கள் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் கல்வியியற் கல்லூரி முகில்நிலை ஆசிரியர்கள் ஆசிரியகலாசாலைகளின் பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோரும் கலந்து கொள்ளலாம்.

எழுதுபவரின் பெயரோ புனைபெயரோ முகவரியோ ஆக்கப்பிரதியில் இடம்பெறக் கூடாது. ஆக்கங்கள் தாள்களின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்படவேண்டும்.

தனித்தாளில் சொந்தப் பெயர் முகவரியை எழுதி அது உங்கள் சொந்த ஆக்கம் என்பதை உறுதிசெய்து ஆக்கப்பிரதியுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பங்குகொள்ளும் எழுத்தாக்கப் போட்டியின் பெயரைக் குறிப்பிட்டு 2004-09-20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விளக்கு அலுவலகத்திற்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

முகவரி

ஆசிரியர், "விளக்கு"
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை,
யாழ் வலயக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.

# தமிழரின் கல்வித் தேவையும், இன்றைய நிலையும்

இலங்கைத்தீவில் தமிழர் கல்வியானது மாறி மாறி வந்த எல்லா அரசுகளாலும் எல்லா நிலைகளிலும் எல்லா வகைகளிலும் புறக்கணிப்புக்குள்ளாக்கப்பட்டு வருகிறது. 70 களின் தொடக்கத்தில் தமிழர்களின் பல்கலைக்கழகக் கல்விக்கு உலைவைக்கும் நோக்குடன் தரப்படுத்தல் எனும் வழிமுறை அன்றைய அரசால் கையாளப்பட்டது.

வெளிப்படையான, நேரடியான அந்த இனவாதப்போக்கு உள்நாட்டில் மட்டுமன்றி உலகளாவிய அளவிலும் கடும் எதிர்ப்புக்குள்ளாகியதைத் தொடர்ந்து சிங்கள இனவெறி அரசு தமிழர் கல்விக்கு உலை வைக்கும் தனது போக்கை மாற்றாது, தமிழர் கல்வியைப் பாதிக்கும் வகையில், அதற்கான வழிமுறைகளில் மாற்றங்களை மேற்கொள்ளும் முயற்சியில் இறங்கியது.

தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்த சிங்கள அரசுகளினால் தமிழ் மொழி மூல ஆசிரியர்களின் பணியமர்த்தல்கள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டும், மட்டுப்படுத்தப்பட்டும் வருகின்றன.

தமிழ்ப் பகுதிகளுக்கான கட்டட வளங்கள் ஏனைய கற்பித்தற் கருவிகள் போன்றவற்றிலும், புறக்கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் மொழிமூலப் பாடநூல்கள் தரக்குறைவாகவும் காலந்தாழ்த்தியும் வெளியிடப்படுகின்றன.

பல பாடங்களுக்கான நூல்கள் தமிழ் மொழியில் அறவே வழங்கப்படாத நிலையும் இருந்து வருகிறது. உலக வங்கியின் உதவியோடு நாடளாவிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கல்விச் சீர்திருத்தங்கள் அதற்கான வளப்பங்கீடுகள் போர்ச்சூழலைக் காரணங்காட்டி, தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்காதநிலை ஏற்படுத்தப்பட்டன.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சியிலிருந்து வருகின்ற சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் இக்கொடிய இனவெறி நடவடிக்கைகளினால் தமிழ் மாணவர் கல்வித்தரம் நாடளாவிய அளவில் எல்லா மட்டங்களிலும் குறைந்து கொண்டு வீழ்ச்சிப் போக்கில் செல்கின்றன.

70 ஆம் ஆண்டுகளில் தரப்படுத்தல்களை எதிர்த்து திறமைக்கு முன்னுரிமை கோரிப் போராடிய தமிழ் மாணவர்கள் இன்று அரசு வழங்கும் மாவட்டக்கோட்டாக்களுக்குக் கையேந்தும் நிலைக்குத் தமிழர் கல்வி தாழ்ந்துவிட்டது; தொடர்ந்தும் தாழ்ந்து கொண்டு செல்கிறது. அன்று தரப்படுத்தலை எதிர்த்துக்கிளம்பிய அளவுக்கு எமது பகுதியிலிருந்து கொடிய கல்விச் செயற்பாடுகளுக்கெதிராக பெரும் எதிர்ப்புக்கள் எவராலும் எழுப்பப்படவில்லை.

கல்விக்கு அடிப்படையான தொடக்கக் கல்விப்பிரிவில் நீண்டகாலமாக நிலவி வரும் ஆசிரியர் பற்றாக்குறையினால் தமிழ் மாணவர்களின் தொடக்கக்கல்வியே ஆட்டங்கண்டு விட்டது.

தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்குத் தேசிய அளவில் 25% பற்றாக்குறை நிலவுகையில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக 30% பற்றாக்குறை இருந்து வந்துள்ளது.

**பட்டியல் (I)**

| | ஆசிரியர் தேவை | இருப்பு | பற்றாக்குறை | பற்றாக்குறை வீதம் | மாணவர் தொகை |
|---|---|---|---|---|---|
| தொடக்க நிலை 6 - 11 அகவை | 10687 | 7582 | 3105 | 29.05% | 251425 |
| இடைநிலை 12 - 17 அகவை | 9154 | 7322 | 1832 | 20.01% | 252519 |
| மொத்தம் | 19841 | 14904 | 4937 | 24.88% | 503944 |

கல்வி கற்க வேண்டிய தமிழ்மாணவர்கள் 18 அகவைக்குட்பட்டோர் ஆயுதப் போராட்டத்துக்குள் ஈர்க்கப்படுகின்றனரேயென்று கவலை கொள்ளும் உலக தொண்டு நிறுவனங்கள் சில ஐ.நா.சபையின் சிறுவர் உரிமை தொடர்பான பட்டயத்தில் குறிப்பிடப்படும் கல்வியுரிமையை வழங்கவேண்டிய சிறீலங்கா அரசு அதனை மறுத்து வருவதைக் கண்டும் காணாதது போன்று இருந்து வருகின்றது. 18 அகவைக்குட்பட்ட 125.000 பேர் தமிழர் தாயகப் பகுதிகளில் (வடக்குக் கிழக்கில்) மட்டும் கல்வி உரிமை மறுக்கப் பட்டவர்களாக இருக்கின்றார்கள். இலங்கை முழுவதிலும் 18 அகவைக்குட்பட்ட 200.000 இற்கும் கூடுதலான தமிழ் மாணவர்கள் ஆசிரியர் இன்மையால் உரிய வகையில் கல்வி யைப் பெற முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

கடந்த 10 ஆண்டுகளாக தொடக்கக்கல்வி ஆசிரியர்கள் - மாணவர்கள் விகிதம் சிங்கள தமிழ்ப் பிரிவுகளிடையே எவ்வாறு இருந்து வருகிறது, என்பதைப் பின்வரும் தரவுகள் தெளிவுபடுத்துகின்றன.

வே. இளங்குமரன்
பொறுப்பாளர்.
தமிழீழ கல்விக் கழகம்.

**பட்டியல் (2) 94ஆம் ஆண்டில்**

| | சிங்கள மொழி | தமிழ் மொழி | தேசிய ஆ.மா விகிதம் |
|---|---|---|---|
| 1. ஆரம்பநிலை வகுப்பு: 1 - 5 | 25.7 | 36.3 | 27.9 |
| 2. இடைநிலை வகுப்பு: 6 - 11 | 21.7 | 28.5 | 22.8 |
| 3. உயர் இடைநிலை வகுப்பு: 12 - 13 | 13.9 | 18.1 | 14.5 |
| 4. இடைநிலை வகுப்பு: 6 - 13 | 20.6 | 27.2 | 21.7 |
| 5. மொத்தம் | 20.9 | 28.9 | 22.4 |


**98ஆம் ஆண்டில்**

கேம்பிரிட்ஜ் கல்வி ஆலோசனைக் குழுவின் உதவியுடன் பிரித்தானிய அரசின் சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களத்தின் நிதி உதவியுடன் சிறிலங்கா கல்வி உயர்கல்வி அமைச்சு தீட்டிய தொடக்கக்கல்வி நிலை ஐந்தாண்டுத் திட்டவரைபிலிருந்து

நோக்கம் : ஆரம்பக்கல்விக்கு மனித மற்றும் நிதி வளங்களை சமத்துவமாக வழங்குவதை 2003 அளவில் செம்மைப்படுத்தல்

இலக்கு 1: 1988 இல் சிங்கள மொழி மூலத்தில் 1:28 ஆக உள்ள ஆசிரியர் மாணவர் விகிதத்தை 2001 அளவில் 1:27 ஆக செம்மைப்படுத்தல்.
1998இல் தமிழ் மொழி மூலத்தில் 1:41 ஆக உள்ள ஆசிரியர் மாணவர் விகிதத்தை 2003 அளவில் 1:27 ஆக செம்மைப்படுத்தல்

**மாவட்ட ரீதியான ஆரம்பக் கட்டத்தில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1998**



பொதுவாக ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை எமது தாயகப் பகுதியில் (வடக்குக் கிழக்கில்) 2000த்திற்குமேல் இருந்து வரும் நிலையில் தொடக்கக் கல்விப்பிரிவில் மட்டும் 1262 ஆங்கில ஆசிரியர்கள் 78.38% பற்றாக்குறை நிலவுகிறது. வன்னிப் பகுதியில் 550 இற்கும் மேற்பட்ட ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.

| தொ. எண் | வலயம் | மா. தொ. | தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் | | | மா. தொ. | இடைநிலைக்கல்வி ஆசிரியர்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தேவை | இருப்பு | பற்றாக் குறை | | தேவை | இருப்பு | பற்றாக் குறை |
| 01 | மடு | 3502 | 36 | 01 | 35 | 2948 | 23 | 02 | 21 |
| 02 | வவுனியா | 6614 | 89 | 01 | 88 | 4200 | 24 | 07 | 17 |
| 03 | முல்லைத்தீவு | 890 | 57 | - | 57 | 9410 | 64 | 17 | 47 |
| 04 | துணுக்காய் | 4473 | 56 | - | 56 | 4411 | 35 | 05 | 30 |
| 05 | கிளிநொச்சி | 13484 | 98 | - | 98 | 14424 | 116 | 14 | 102 |
| மொத்தம் | | 36563 | 336 | 02 | 334 | 35393 | 262 | 45 | 217 |
| | | | | *0.59%* | *99.41%* | | | *17.17%* | *82.83%* |

மொத்த மாணவர் - 71956
மொத்தத்தேவை - 598
இருப்பு - 47 7.85%
மொத்தப் பற்றாக்குறை - 551 92.15%

ஜப்பானின் உதவியுடன் ஆக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகம் தொடக்க காலத்திலிருந்தே சிங்களக் கல்வி நிறுவகமாக இயங்கி வருவதால் தமிழர் கல்விக்கு ஏற்பட்டுள்ள, ஏற்பட்டுவரும் இடர்கள், தடைகள் சொல்ல முடியாதவை. ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் ஆசிரியர் கைந்நூல்கள், பாடநூல்கள் உரிய காலத்தில் உரிய முறையில் கிடைப்பதில்லை. கலவி நிர்வாக சேவை அலுவலர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையினால் அந்தப் பணிகளைப் பள்ளி முதல்வர்களும் பள்ளி முதல்வர்களின் பணிகளை ஈடுசெய்ய ஆசிரியர்களும் பணியாற்றுவதால் கற்றல் கற்பித்தலில் முழுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.






இடைநிலைக்கான கணித விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறைகளினால் கணித விஞ்ஞான கல்வித்தரந்தாழ்ந்து விட்டது. தமிழ்ப் பள்ளிகளில் தொழில் முன்னிலைக்கல்வி அறவே இல்லை என்ற நிலை ஆகிவிட்டது.

தேவையான தொழில்நுட்பக் கல்லூரிகள் இன்மையினாலும் இருக்கும் தொழில் நுட்பக் கல்லூரிகள் கடும் வளப்பற்றாக்குறைகளோடு இயங்குவதாலும் தொழில் தொடர் பானதும் தொழில்நுட்பம் தொடர்பானதுமான அறிவு தமிழ் மாணவர்களுக்கு அறவே கிடைக்காத எட்டாக்கனியாகி விட்டது.

கீழே தரப்பட்டுள்ள க.பொ.த.(சா.தர) தொழில்நுட்பப் பாடத்தில் தோற்றும் தமிழ் மாணவர்கள் பற்றிய வீத புள்ளிவிபரம் தமிழ் மாணவர்களின் தொழில்நுட்பப் பாட நிலையை தெள்ளத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

**க.பொ.த.(சா.தர) தொழில்நுட்ப பாடங்களில் தமிழ்மொழிமூல மாணவர்கள் தோற்றிய வீதம்**

| பாடங்கள் | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மரவேலை | 7.63% | 4.38% | 6.27% | 12.66% | | | | |
| மேசன் வேலை | 1.5% | - | - | - | - ✳ | 6.57% | 9.36% | 9.09% |
| உலோக வேலை | 3.14% | 0.35% | 1.9% | 2.64% | 0.83% | | | |
| வானொலி திருத்தம் | 7.12% | 1.07% | 3.26% | 4.59% | 9.1% | | | |
| நெசவு | 1.75% | 3.18% | 0.42% | 1.93% | 7.84% | | | |
| மோட்டார் தொழில்நுட்பம் | 3.9% | 3.23% | 5.17% | 7.28% | 8.6% | | | |
| மின்னியலும், இலத்திரனியலும் | | | | 1.75% | 1.51% | 4.82% | 4.34% | 3.82% |
| இயந்திரவியல் தொழில்நுட்பம் | | | | | | | 3.75% | 3.05% |
| கலைத்திறன், நுட்பத்திறன்கள் | | | | | | 2.45% | 1.35% | 0.93% |
| விவசாயம் | 10.03% | 7.06% | 10.5% | 10.77% | | 18.56% | 19.31% | 20.05% |
| வர்த்தகம் | 27.0% | 19.41% | 19.4% | 26.1% | 27.3% | 31.64% | 31.99% | 27.29% |
| மனைப்பொருளியல் | 16.64% | 11.45% | 15.62% | 20.76% | | | | |

✳ மரவேலை மேசன்வேலை என்பன அடங்கிய நிர்மாணத் தொழில்நுட்பம் என்ற புதிய பாடத்தில் 99ஆம் ஆண்டிலிருந்து தோற்றிய தமிழ் மாணவர் தொகை தரப்பட்டுள்ளது.

இத்தரவுகள் யாவும் தமிழர் கல்வியின் நிலைமையையும், தமிழர் கல்வியில் அவசியம் ஏற்படுத்தப்படவேண்டிய செயற்பாடுகளையும், கல்வி நிர்வாகத்தில் எதிர் நோக்கப்படும் நலமான மாற்றங்களையும் சுட்டி நிற்பதை அவதானிக்கலாம்.

எமது கல்வித்தரத்தை மேம்படுத்தவேண்டுமெனில் எமக்கெனத் தனித்துவமான கல்விக்கொள்கையும், கல்வித்திட்டமிடலும் அவசியமென்பதை இத்தரவுகள் நோக்கி நிற்பதை உணர்வோம்.

# வளர்க அறம் வாழ்க



வளரும் பயிர் செழிக்க வார்க்குமுயிர் நீராய் - அன்பு
வழங்கி அணைத்தறிவு ஊட்டுமிறை முதலாய்
உளமும் உடலும் உயிருமொழி பரவும்
உலகும் உயர்வும் ஒன்ற மனம் நிரவும்
முளையிற் தெளிவும் முயல்வு மிசைகூட்ட - கல்வி
முன்னேற உளமார முன்னடப்போர் வருக

நன்றாய்ப் படிக்கவரும் நல்லசிறார் பலராம் - அதை
நடிப்பாய் முடிக்கவரும் சிலர் இங்கே உளராம்
நின்றாய்ந் தொழுகுமுயர் நெஞ்சுடைய பேரும்
நிலையுயரக் கற்றறியும் நீதியுடையோரும்
ஒன்றாகக் கூடியுள்ள உயர்வான பள்ளி - அதில்
ஒழுக்கமிகும் உத்தமமே வளர்க அறம் வாழ்க

எஸ். ரஞ்சன் செல்வகுமார்
நெளுக்குளம்
வவுனியா.

# இரைச்சலால் மாசுறும் உலகம்

நவீன நகர்ப்புற வாழ்வின் தொல்லைகளுள் மேலானது இரைச்சலாகும். இது பரவிவரும் வேகத்தில் கிராமப்புறங்களையும், அது மாசுபடுத்தி விடக்கூடும் என ஐயுறுவதில் நியாயங்கள் உள்ளன.

கண்ணாற் பார்க்கவோ, கைகளாற் தொடவோ முடியாத இந்த இரைச்சலால் விளையும் வேதனை எமது சூழலை மாசடையச் செய்கின்றது. வாழ்வின் பெரும் தொல்லையாகத் தொடரும் இந்த இரைச்சலால் மனித மனங்களில் எரிச்சல் கூடுகிறது.

ஒரு நாயின் குரைப்பிற்கும், உரொட்டிக் கடையில் கேட்கும் கொத்து ரொட்டி போடும் தாளத்தின் பேரிரைச் சலுக்கும் எங்கள் காதுகள் திறந்தே இருக்கின்றன. பேருந்துப் பயணத்தின்போது அதன் பேரிரைச்சலோடு சேர்ந்தொலிக்கும் சினிமாப்பாட்டின் துள்ளல் இசைக்கும் எமது காதுகள் எவ்வாறெனினும் மூடத்துணிவதில்லை.

இவ்விரைச்சல்கள் யாவும் எமது தூய்மைக்குக் கேடாகும். என்பதை நாம் உடனடியாக உணராவிட்டாலும் காலக்கிரமத்தில் அதன் தாக்கம் எமது முதுமையுடன் சேர்ந்து வெளிப்படவே செய்யும் என்பது உண்மையாகும்.

இரைச்சல் ஒரு புதிய பிரச்சினை அல்ல. என எண்ணினாலும் அவற்றைத் தடுக்க அல்லது குறைக்கக் காலத்துக்குக் காலம் தோன்றிய சட்டங்களால் முடியாமற் போகின்றமையே ஒரு பிரச்சனை எனலாம்.

எமது சன நெரிசல் மிக்க சந்தைகளில் ஆயிரக்கணக்கானோர் கூடிநிற்கும் கூட்டத்தில் தேர்தல் காலத்தில் திருவிழாக் கோலத்தில் திரண்டெழும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் எழும் இரைச்சலின் அதிகரிப்பால் பலரது செவிப்பறை பாதிப்புறுவது என்னவோ உண்மைதான் அதனை உணர எவருமே உடனடியாக முன்வரு வதில்லை.

செவிப்புலனுணர்வு போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியதே. செவிப்பறை பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றிச் செவிப்புலனுணர்வு குறைந்தோர் அடையும் இன்னல்களை நோக்குவதன் மூலம் தெளிந்து கொள்ளலாம். செவிப்புலன் பாதிப்புறுவதற்குப் பல காரணங்கள் இருப்பினும் இரைச்சலும் பிரதான காரணிகளில் ஒன்று என்பதை நாம் உய்த்துணர்தல் அவசியமாகும்.

எம்மைச் சூழ்ந்தொலிக்கும் ஒலிகளை நாம் கேட்பதால் சாதாரணமாக ஒலிமென்மையை எமது காதுகள் ஏற்றுக் கொள்ளுகின்றன. பலவேளைகளில் அவற்றின் அதிகரிப்பை நாம் அவதானிக்கின்றோம். அதிகரிக்கப்படும் ஒலியலைகளால் எமது காதுகள் செவிட்டுத் தன்மைப் பெறச் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன.

பலர் ஒன்று கூடும் இடங்களில் பலரின் மத்தியில் வானொலி ஒலிப்பதிவு நாடாக்கள் மூலம் எமக்கு மாத்திரம் கேட்கப்பயன்படும் ஒலி வழங்கிகளைப் **(Ear Phone)** பயன்படுத்திப் பாடல்களைக் கேட்கின்றோம். இது இயற்கைக்கு மாறுபட்டதாகச் செவிப்பறையின் அருகே ஒலியின் அழுத்தத்தையும், அதிர்வையும் செலுத்தும் ஒரு செயலாக அமைகிறது.


மென்மையான ஒலிகள் பல இணைந்து ஒலிக்கும் போது இரைச்சலாக

அது மாறுகின்றது. எமது காதுகள் ஒலியைத் தம்முள் பெற்று எமது சிந்தனைக்கும், செயலுக்கும் தூண்டுதல்களாக அமைகின்றன. ஒலியின் வீச்சுக்கள் டெசிபல்கள் **(dB)** என்ற அலகினால் அளக்கப்படுகின்றன. சாதாரணமான உரையாடல்களின்போது நாம் கேட்கும் ஒலி வீச்சின் அளவு ஏறத்தாழ 60**dB** டெசிபல்கள் என அறியப்பட்டுள்ளது. 85**dB** டெசிபல்களுக்கு மேலான ஒலிகளை அதிகநேரம் கேட்கும் சந்தர்ப்பங்களின்போது எமது செவிகள் பாதிப்படைகின்றன. 100 அல்லது 125 டெசிபல்கள் வரையான ஒலிகளைக் கேட்கும் சந்தர்ப்பங்களில் எமது காதுகளில் வலி ஏற்படுவதைக் கண்டறிந்துள்ளார்கள்.

ஒலிகளின் வேறுபட்ட தன்மைகளை உள்வாங்கி மூளைக்கு அனுப்பி அவற்றை உணரும் அல்லது தெரிவிக்கும் உறுப்பாக எமது காதுகள் தொழிற்படுகின்றன. அளவுக்கு அதிகமான ஒலிகளைத் தொடர்ச்சியான இரைச்சல்களைக் கேட்கும்போதும் எமக்குச் சோர்வு எரிச்சல் போன்றவை எற்படுகின்றன. இரைச்சல் மனச்சோர்வுடன் உடல் நோய்களுக்கும் காரணமாகின்றமை அறியப்பட்டுள்ளது.

தொடர்ந்து இரைச்சலை அனுபவிக்கும் நிலைக்கு நீங்கள் தள்ளப்படும்போது அது உங்களின் ஆளுமையைப் பாதிக்கின்றது.

இரைச்சல் என்ற தூய்மைக்கேட்டினால் பாதிப்புற்ற பலரிடம் கலந்து பெற்ற கருத்துக்களின்படி; சூழ உள்ளவர்கள் மீது அவர்களுக்கேற்படும் வெறுப்பும், பழி வாங்கும் எண்ணமும் மேலோங்குகிறது என்கின்றனர். சில வேளைகளில் கொலை செய்யும் வேகம் தோற்றுவதாகவும், அவர்கள் மீது யாராவது குற்றம் சுமத்தினால் குற்றம் சுமத்துவோர் மீது ஆத்திரம் ஏற்படுவதாகவும் அத்தகைய அயலவரிடத்தில் பகைமை உணர்வே வளர்வதாகவும் கூறுகின்றனர்.



மாவுறையூரான்.

இந்நிலையில் இரைச்சலைத் தடுப்பது எங்ஙனம்? அல்லது இரைச்சலிலிருந்து விலகுவது எங்ஙனம், என்பதுபற்றி நாம் சிந்திப்பது அவசியமாகும். இரைச்சலால் இன்னலுறுவோர் நாம் அனைவருமே என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு ஒருவருக்கொருவர் தத்தமது செயற்பாடுகளினால் இரைச்சலின் கேடுபற்றி மாணவர்களுக்கும், சக ஆசிரியர்களுக்கும், சமூகத்துக்கும், உணர்த்துவதன் மூலம் எமது சூழலை இரைச்சலிலிருந்து பாதுகாப்போம்.

அயல்வீட்டில் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கும் இசையோசை அவ்வீட்டிலுள்ளவர்களுக்கு அவர்களின் வேலையைச் செய்வதற்கு உதவுவதாகக் கூறுகின்றனர். அவர்களின் கருத்துப்படி இரைச்சலாகவன்றி இனிமையாகிப்போன ஒலிகளால் சூழல்மாசடைதல் இல்லை என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது. இது பற்றிய உங்கள் கருத்தை விரும்புகின்றோம். வாசகர்களே! எழுதுங்கள். சிறப்பான கருத்துக்கள் விளக்கில் வெளியிடப்படும் - ஆசிரியர்

அறிவைப் பயன்படுத்தல்

# அதிசயமே!

ஈழத்திருநாட்டின் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை சின்னக்கிண்ணியா முதலாம் வட்டாரத்தில் 1934 - 07 - 19ம் திகதியில் பிறந்த ஜனாப் ஏ.எம் அப்துல் கஹ்ஹார் அவர்கள், தமிழ் கூறும் நல்லுலகில் தலை நிமிர்ந்து நிற்கும் சிறந்த ஒரு கவிஞராவார். கிண்ணியா பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் எழுதுவினைஞராக கடமையாற்றி ஓய்வு பெற்ற இவர் கிண்ணியா கலையிலக்கிய மன்றத் தலைவரும் கிண்ணியா எழுத்தாளர் சங்கத்தலைவருமாவார். அவரது **அதிசயம்** என்னும் கவிதை நூலிலிருந்து இக்கவிதையை வாசகர்களுக்குத் தருகிறோம். நன்றி.

எண்ணும் எழுத்தும் கற்பிக்க
ஏற்ற முஸ்லிம் ஆசிரியர்
பெண்ணும் ஆணும் வெளிநாடு
பேரம் பேசி யேற்றுவதிற்
கண்ணும் கருத்து மாயிருந்து
கற்க வருவோர் தங்கட்கோர்
மண்ணும் கற்றுக் கொடுக்காமல்
மழுப்பி அனுப்பல் அதிசயமே!

தேடற்கரிய தொழில் பெற்று
திகழும் உயர்ந்த ஆசிரியர்
கூடஉழைத்துப் பணம் சேர்க்கும்
குறியில் "ரியூசன்" கொடுப்பதற்காய்
பாடசாலை நேரத்தில்
பாங்காய் லீவு தினம்போட்டு
ஓடஏழை மாணவர்கள்
ஓய்வு பெறுதல் அதிசயமே!

நாடவேண்டாம் இனிக்கற்றும்
நாட்டில் வேலை கிடையாது
ஆடம்பரமாய் வாழ்ந்திட நீ
அரபு நாடு செல்லென்று
பாட சாலை ஆசிரியர்
படிக்கும் பருவ மங்கைக்கு
ஓடர் போட்டு அனுப்புவதும்
ஓதும் உலகில் அதிசயமே!

தீர்க்க தரிசி நபிநாதர்
திருவாய் மலர்ந்த அருள்மொழியை
ஆர்வ மாகக் கற்றவர்கள்
அன்பு மக்கள் வாழ்வுக்கு
மார்க்கக் கல்வி தகாதென்று
மதித்து வெட்கி பெரும்புகழைச்
சேர்க்கும் உலகக் கல்விபெற
செய்து மகிழ்தல் அதிசயமே!

கற்று அறிந்த ஆலிம்கள்
கருதி இலஞ்சம் கைக்கூலி
பெற்றுக் கொண்டு உண்மைகளை
பெரிய பொய்கள் என்பதொடு
சற்றும் உண்மை யில்லாத
சாதப் பொய்யை மெய்யென்றும்
முற்றத் தெளிவாய்க் கூறித்தம்
முதலைப் பெருக்கல் அதிசயமே!

☆

**கலாஜோதி ஏ.எம். அப்துல் கஹ்ஹார்.**



# கற்றலில் கற்பிப்பவரின் பணி

கற்பித்தல் முறையில் பிள்ளையின் முக்கியத்துவத்தை நோக்கி ஆசிரியர் அறிந்து கொள்ளவேண்டிய விடயங்கள் நிறையவே உள்ளன. பிள்ளையின் வாழ்க்கைக் காவியம் ஆசிரியர்களின் இலட்சியப் பாதையில் இருந்து எழ வேண்டும் என்பது கவியரசர் ரவீந்திரநாத தாகூர் அவர்களின் கருத்தாகும். குழந்தைகளின் ஆளுமை இயற்கையுடன் ஒன்றியதாக வளர வேண்டும். அவர்களுடைய ஆற்றல் எல்லையற்றது என்பதை அவர்கள் உணர வேண்டும். பிள்ளைகள் வாழவேண்டும் என்ற தணியாத தாகத்துடன் வளர்பவர்கள் அவர்களின் தாகத்துக்கு ஏற்றதாக கல்லூரிகள் நீரூற்றவேண்டும். இதுவே கல்லூரிகளின் செயல்பாடுகளுக்கு கவியரசர் வகுத்த வரைவிலக்கணம் ஆகும். குழந்தைகள் கல்விபயிலும் இடம் வெறுப்பை ஊட்டாத இயற்கையான இல்லச்சூழல் கொண்டதாக இருத்தல் வேண்டு மென்றும் அன்பும், பரிவும் சுதந்திரமும் அவர்களுக்கு அங்கு கிடைக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுவதனால் இத்தகைய பண்புகளைக் கொண்டவரும், ஆளுமைமிக்கவருமான ஆசிரியர்களே! இங்கு வேண்டப்படுகின்றார்கள்.

புலன்வழிப் பயிற்சி மூலம் பிள்ளைகளிடம் மறைந்திருக்கும் இயல்பான ஆற்றல்களை வளர்க்கவேண்டும் என்ற கருத்தை உலகுக்குத் தந்தவர் பெஸ்டலோஜி ஆவார். இவர் பூரணமாக மனித வளர்ச்சிக்குரிய பண்புகள், குழந்தையிடம் அடங்கியுள்ளன என்றும் அவற்றை வெளிப்படுத்தி அக்குழந்தையைச் சிறந்த ஆளுமையுடையவனாக ஆக்க வேண்டியது கல்வியின் பொறுப்பு எனவும் கூறியுள்ளார். இக்கருத்தின் அடிப்படையில் குழந்தைகள் பயிலும் இடம் இன்பப் பூங்காக்களாக இருக்கவேண்டும்.

குழந்தைகள் வளரும் செடிகளுக்கு ஒப்பானவர்கள் தோட்டக்காரன் செடிகள் வளர்வதற்கு அவற்றின் மேல் கண்ணும் கருத்துமாக இருந்து அவற்றின் வளர்ச்சியை மேம்படச் செய்வதுபோல முழு மனிதனாக வளர்ச்சி பெறும் குழந்தைகளின் வளர்ச்சிக்குரிய சூழலை ஏற்படுத்தி அவர்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தும் தோட்டக்காரனாக ஆசிரியர் செயலாற்றவேண்டும். தனித்தனியே ஒவ்வொரு மாணவரினதும் வளர்ச்சியில் ஆசிரியர் கவனம் செலுத்துதல் வேண்டும். தோட்டக்காரன் செடிகளின் மீது எவ்வகையான கவனத்தைச் செலுத்தினாலும், செடிகள் அவற்றின் இயல்புகளுக்கேற்பவே வளர்ச்சி அடைகின்றன. இதனை வள்ளுவர் "நிலத்திற் கிடந்தமை கால் காட்டும்". என்ற குறள் வரியிலே பொருள் விரிக்கக்காணலாம். இதுபோல குழந்தைகளும், இயற்கை ஆற்றல்களுக்கும், இயல்புகளுக்கும், ஏற்பவே வளர்ச்சி பெறுவர். இத்தனியாள் வேறுபாட்டை ஆசிரியர் அறிந்து குழந்தைகளிடம் மறைந்திருக்கும்


## த. சுதன்

முகிழ்நிலை ஆசிரியர், இரண்டாம் வருடம்
தேசிய கல்வியியற் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



இயல்பூக்கங்களையும், திறன்களையும், வெளிப்படுத்தி அவை வளர்வதற்கு உதவி புரிந்து அவர்கள் முழுமைபெற்று பயன் தரத்தக்க வாழ்வு நடாத்துவதற்கு வழி காட்டவேண்டும்.

குழந்தைகளின் கற்றலில் அவர்களின் நாட்டம், ஊக்கம், செயல்கள், அனுப வங்கள் என்பவை முக்கியமானவையாகும். குழந்தைப்பருவம் விளையாட்டின் மீது விருப்புடைய பருவமாதலால் விளையாட் டின்மூலம் உரிமை, மகிழ்ச்சி, சுதந்திரம், தனித்திறமை, என்பன வெளிப்படுகின்றன. ஆனால் "குழந்தைப்பிள்ளைக்கும், குட்டி நாய்க்கும், இடம் கொடுக்கக்கூடாது." என்ற பழமை வாய்ந்த சிந்தனையின் பரம்பரை நோய் இன்றும் எம்மத்தியில் இருப்பதை எண்ணி மனம் வருந்தவேண்டியுள்ளது.

கள்ளம் கபடமற்ற வெள்ளயுள்ளம் கொண்ட பிஞ்சுகளை சுதந்திரமாகச் செயற் படவும், அவர்களின் இயல்பான நடத் தைக்கு வகுப்பறையில் இடம் கொடுத்து தானும் ஒருவரான ஆசிரியர் செயற்படும் போது வினைத்திறனுடைய கற்றல்கற் பித்தல் நிகழ்தல் சாத்தியமாகும்.


கிண்டர் கார்டன் **(Kinder Garden)** முறையில் கற்றல் கற்பித்தல் நிகழும் போது பாடப்புத்தகம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அங்கே குழந்தைகளின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து விளை யாட்டின் மூலம் நல்வழியில் கல்வி அளிக் கப்படுகிறது. இம்முறையானது பிள்ளை களின் உடலும், உள்ளமும் ஒருங்கி ணைந்து வளர்ச்சி பெறுவதற்கு உதவு கிறது. அபிநயம், இசை, இயக்கம் என்ற அடிப்படையில் குழந்தைகள் ஆடிப்பாடி மகிழ்வதன்மூலம் கற்றலில் ஆர்வம் அதிகரிக்கிறது. இதனால் அவர்களின் ஆற்றலும், அறிவும் வளர்ச்சி அடைகின்றன. எல்லோரும் ஒன்று; சேர்ந்து கூடி ஆடிப் பாடி விளையாடுதல் மூலமான செயற் பாடுகள் கூட்டு மனப்பான்மையையும், மற்ற வர்களை மதித்து நடக்கும் பண்பினையும், ஒழுக்கக்கட்டுப் பாடுகள் என்பவற்றினையும் இயல்பாகவே குழந்தையிடம் வளரச் செய் கின்றன. இதனையே கிண்டர் கார்டன் முறை என்பர். இது இல்லம், சமூகம், நாடு ஆகிய மூன்றினையும், ஒன்றி ணைக்கும் நிலையமென "புரோபில்" என் பவர் விளக்கி இருப்பதை இங்கு மனங் கொள்ளுதல் நன்று.

★


# திமிங்கிலம் செய்வோம்

ஒரு சதுரமான தாளை எடுத்துக்கொள்ளுங்கள் அதனை உரு. **1** இல் காட்டியவாறு புள்ளிக்கோட்டில் மடியுங்கள். உரு. **2** இல் காட்டியவாறு புள்ளிக்கோட்டில் மடியுங்கள். உரு. **3** இல் காட்டியவாறு **A. B.** ஆகிய முனைகள் பொருந்த சேர்த்து மடியுங்கள். உரு. **4** இல் புள்ளிக்கோடிட்ட இடத்தில் மடியுங்கள். அவ்வாறே உரு, **5, 6, 7,** ஆகியவற்றில் காட்டப்பட்டவாறு மடியுங்கள். திமிங்கிலம், உருவாகி இருக்கும்.


ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களே!
இது உங்கள் பிள்ளைகளுக்காக.




உரு: 1




உரு: 2





உரு: 3




உரு: 4




உரு: 5





உரு: 6



உரு: 7

# கற்றல் கற்பித்தலின்போது....



ஆசிரியர்களே! நீங்கள் சிறந்த ஆசிரியர்களாக மதிக்கப்படவேண்டுமெனில் உங்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடு களை வகுப்பறைக்கு வெளியேயும் விரிவு படுத்துங்கள். உங்கள் அவதானத்தை திறமை மிகுந்த மாணவரிடத்தில் மாத்திரம் செலுத்தாமல் திறமை குறைந்த மாணவரி டத்தில் அவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் செலுத்துங்கள். நீங்கள் உங்கள் மாணவர்களுக்கு அறிவினை மாத்திரமல்ல திறன், மனப்பாங்கு ஆகிய வற்றின் விருத்திக்காகவும், கற்றல் கற்பித் தலை வழங்குபவராக மாறுங்கள்.

போதனைகளுடன் மாத்திரம் உங் கள் கற்பித்தலை நிறுத்திக்கொள்ளாமல் விளையாட்டுக்கள், செயற்றிட்டங்கள், தொழிற்பாடுகள், குழு வேலைகள் என்ப வற்றினூடாகவும், கற்பித்தலை விரிவுபடுத் துங்கள். ஆசிரியர் கைநூலில் கொடுக் கப்பட்டுள்ள தொழிற்பாடுகள் மட்டுமன்றி புதிய நவீன தொழிற்பாடுகளின்மூலமும் மாணவர்களின் கற்றலுக்கு உதவுங்கள். பொருத்தமான வளங்கள், பிரதேச தேவைகள், மாணவர் தேவைகள் என்ப வற்றை அனுசரித்து உங்கள் கற்பித்தலை மேற்கொள்ளுங்கள்.

பாடங்களைத் தனித்தனியாக முன் வைப்பதிலும் பார்க்க ஒன்றிணைத்து அனுபவரீதியான ஆற்றலைப்பெற ஏற்ற வகையில் திட்டமிட்டுக் கற்பியுங்கள். மாணவர்களின் அடைவினைக் கணிப்பீடு செய்வதற்கு முறைசார் வகையை மாத் திரம் பயன்படுத்தாமல் அவதானித்தல், கலந்துரையாடல், மாணவருடன் சேர்ந்தி யங்குதல் மூலமான கணிப்பீடுகளையும், செயற்படுத்துங்கள். உங்கள் கற்பித்த லிலும் மேலாக மாணவர்கள் செயலாற்றிக் கற்பதற்கு முதலிடம் வழங்குங்கள். மாண வர்களின் துலங்கல்களிற் காணப்படும் பிழைகளை உடனடியாகத் திருத்துவதுடன் அவற்றிற்கான காரணங்களையும், மாணவர் களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

அறிக்கைப்படுத்துவதற்கு மாத் திரம் பரீட்சைகளையும், மதிப்பீடுகளையும், பாவிக்காதீர்கள். மாணவர்களின் கற்றல் இடர்பாடுகளை நீக்கவும், ஆசிரியர் தமது கற்பித்தல் முறைகளில் உள்ள குறை பாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், கணிப் பீடுகள், மதிப்பீடுகள் என்பவற்றைப் பயன் படுத்த முயற்சியுங்கள்.

கற்பித்தல் கலாசாரத்திலிருந்து கற்றல் கலாசாரத்திற்கு மாறுவீர்களாயின் நீங்கள் ஒரு சிறந்த ஆசிரியராவது நிச்சய மானதாகும்.

ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள் என்பதிலும் மேலாக மாணவர்கள் கற் கிறார்கள் என்பதே உயர்வானதாகும்.

# விளக்கு

கல்வியியலாளர்களே!

ஆசிரியர்களே!

மாணவர்களின் கல்வி மேம்பட ஒன்றுபட்டு உழைப்போம். பாடசாலை முகாமைத்துவம், ஆசிரியர் செயலாற்றல், ஆதியாம் திறமைகளை வளர்த்தெடுக்கும் பாரிய பணியில் ஈடுபடும்

விளக்கு

சஞ்சிகையைத் தொடர்ந்து வாசியுங்கள்,
உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.

விளக்கு

யாழ்ப்பாணம், நல்லூர். பிள்ளையார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


மலரும் மலர்கள்
டிஜிட்டல்
வீடியோ அன் போட்டோ
முருகமூர்த்தி வீதி
வண்ணார்பண்ணை,
யாழ்பாணம்
நித்தி
TP:-021-222 5767
0777 885870
BLOSSOMS
கண்டி வீதி
கிளிநொச்சி.
(ஆஸ்பத்திரிமுன்பாக)